ஆறாம் தந்திரம்

(வியாமளாகமம்)

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை

இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை

நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்

புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.*

1. சிவகுரு தெரிசனம்

(தம்முதல் குருவுமாய்த் தோன்றல்)

1548. பத்திப் பணித்துப் பரவும் அடிநல்கிச்

சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்

சத்தும் அசத்துஞ் சதசத்துங் காட்டலாற்

சித்தம் இறையே சிவகுரு வாமே.[1]

(ப. இ.) முழு அன்பாகிய பத்தியினை அடியேன்பால் எழுப்பி எல்லாராலும் தொழப்படும் தன் திருவடியிணையினைத் தந்தருளி, இயற்கைத் தூய செவியறிவுறூஉவாகிய திருவைந்தெழுத்தாம். உபதேச மந்திரத்தால் வழி ஆறினும் உள்ள குற்றங்களைப் போக்கியருள்வன். நிலைபெற்ற சிவமெய்யினையும் நிலைபேறில்லாத மாயாகாரிய உலகியற் பொருள்களையும் இரண்டனுடனும் சார்ந்து இரண்டன் பயனையும் நுகர்ந்து சார்பி எனப்படும் உயிராம் சதசத்தினையும் உணர்வுக்கு உணர்வாய் அருட்கண்ணாலுணர்த்தியருள்வன். ஆதலால் சிவகுருவாக எழுந்தருளி வருபவன் உறுதியாக விழுமிய முழுமுதற் சிவனேயாவன்.

(அ. சி.) பத்திப்பணித்து - அன்பு கனியச் செய்து. சுத்த உரை - குற்றமற்ற தெளிந்த உரை. துரிசற - மலபந்தங்கள் நீங்க. சோதித்து - அத்துவா சோதனை செய்து. சத்து, அசத்து, சதசத்து - சிவம், பாசம். சீவன். சித்தம் இறையே - உள்ளத்தின்கண் இருக்கும் இறைவனே

(1)

1549. பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு

நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே

கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்தது

ஆசற்ற சற்குரு அம்பல மாமே.[2]

* இப் பாடலைப் பின்னுள்ள பாடலெனப் பேசுவர் பெரியோர்.

1. சத்தசத் சிவஞானசித்தியார், 7. 3 - 1.

" அறியாமை. " 8. 2 - 20.

2. எழுமுடல், சிவஞானசித்தியார், 2. 3 - 2.

(ப. இ.) ஆருயிர்களுக்குத் தொன்மையே ஏற்பட்ட மலத்தைப் போக்குதற்கு, மாயை வினைகளை உடன்கூட்டி அம் மலத்தைப் பறித்திட்டருள்வன். மலம் நூங்கவும் உயிர்கள் சார்புபற்றிப் பன்னெடுநாள் விருப்பம் வைத்திருந்த உடலின் விருப்பத்தை ஒழிப்பித்து, நேரடியாகத் தன் திருவடியிற் கூட்டிப் பெரும்பேறு நல்குதலால் அச் சிவம் பேரருள் நோக்கத்தையுடையது. அத்தகைய குற்றமகற்றிக் குணமருளும் உண்மைக் குரு அறிவுப் பெருவெளிச் சிவனேயாவன்.

(அ. சி.) பாச ...ட்டு - மாயைக் கூட்டி ஆணவமலத்தைத் தொலைத்து. கூசற்ற - அச்சமற்ற. நேசித்..வித்து - தானென விரும்பி இருந்த சரீர ஆசையை நூக்கி. நாட்டத்தது - கருத்தினையுடையது.

(2)

1550. சித்திகள் எட்டொடுந் திண்சிவ மாக்கிய

சுத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்

சத்தியும் மந்திர சாதக போதமும்

பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே.

(ப. இ.) அகத்தவத்தாற்கு எய்தும் எண்வகைச் சித்திகளுடன் உறுதியான சிவமாக்கிய அறுவகை வழிகளின் தூய்மையும், சிவபெருமானின் தன் வயத்தனாதல் முதலிய திருவருட் குணங்கள் எட்டும், சிவயோகத்தால் வரும் சத்தியும், மந்திரங்களைப் பயிலும் உணர்வும், பொதுநூக்கிச் சிவபெருமானே முழுமுதல் என வழிபடும் முழுமுதற் பண்பும் ஆகிய இவையனைத்தும் முழுமுதல் தலைவனாகிய சிவபெருமான் திருவருளால் கைகூடும் என்ப.

(அ. சி.) சுத்தியும் - அத்துவா சோதனையும். எண்...யும் - சிவனுடைய எண்குணங்களையும் பொருந்தியதால் தூய்மையும், யோக...யும் - எண்வித யோகங்களால் அடையும் வல்லமையும். மந்திர சாதகமும் - மந்திர வல்லமையும். போதமும் - அறிவும். பத்தியும் - அடியார் பத்தியும். நாத...லும் - சிவகுரு கருணையால் நடைபெறும்.

(3)

1551. எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்

நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்

எல்லாரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலாற்

சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே.[1]

(ப. இ.) முப்பத்தாறு தத்துவங்களுக்கு உட்பட்ட உலகங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட சிவன், இவ் வுலகத்துத் தென்னாடுடைய சிவனேயாய்த் திகழ்கின்றனன். அவன் நல்லாராகிய சிவஞானிகள் உள்ளத்து மிக்க அருள் செய்தல்போல் ஏனையார்க்கும் செய்தற் பொருட்டுப் புறத்தே தம் முதல் குருவுமாய்த் தோன்றி யருள்வன் அதனால் எல்லாரையும் இப் பிறப்பொன்றிலேயே உய்யக் கொண்டருள்வன். அதனால் புகழமைந்த நற்குரு இயற்கைச் சிவனே. சுத்தம் - இயற்கை.

(அ. சி.) எல்...லோன்-அண்டங்கள் எல்லாம் கடந்த அமலன். இப்பாலாய் - குருவடிவாய் இங்கு வந்து. உய்யக்கொண்டு - ஈடேறும்படி.

(4)

---

1. மனத்தகத்தான். அப்பர், 6. 8 - 5.

" அம்மையப்ப. திருக்களிற்றுப்படியார், 1.

1552. தேவனுஞ் சுத்த குருவும் உபாயத்துள்

யாவையும் மூன்றா யுனக்கண் டுரையாலே

மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பால்

யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே.

(ப. இ.) தேவனாகிய சிவபெருமானும் இயல்பாகவே பாசங்களின் நின்று நீங்கிய அடிமை ஆருயிரும் சிவகுருவாவர். இவ் விருவரும் ஒருவரே. இறை, உயிர், தளை என்று கருதிப் பேசப்பெறும் பதி, பசு, பாசம் என்ற மூன்றினுள் உன்னி உரைக்கப்படும் ஒன்றாக அவனிருப்பதுங் காண்க. அவன், கெடாத உயிராகிய பசுவினது தளையாகிய பாசத்தை அருமறை, உபதேசத்தால் மாற்றியருள்வன்; மாற்றவே திருவடிப்பேற்றின்கண் எல்லாவுயிரும் சென்று இன்புறும். அத்தகைய சிவபெருமான் மேலாம் குருபரன் ஆவன். அவன் திருவடியிணையில் முழு அன்பு புரிவாயாக. பரம் - மேல். இவ் வைந்து செய்யுட்களுள் மூன்றாவது செய்யுள் ஒழிந்த ஏனைய நான்கு செய்யுட்களிலும் முறையே சிவகுரு, சிவசற்குரு, நற்குரு குருபரன் என்னும் திருப்பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றால் முறையே அறிவிற் சூலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நான்கு நெறிகளும் குறிப்பிற் புலப்படுவன காண்க. அருமறை - திருவைந் தெழுத்து உனக்கண்டு : உன்னக் கண்டு; உன்ன - கருத. உன என்பது உன்ன என்பதன் இடைக்குறை.

(அ. சி.) தேவனும் - சிவனும். உபாயத்துள் - பதார்த்தங்களுள். மூன்றாய் உனக் கண்டு - பதி, பசு, பாசம் என மூன்றாகக் கருதுவதை உணர்ந்து. மூவாப் பசு பாசம் - அழிவில்லாத ஆன்மாவின் பாசத்தை.

(5)

1553. சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்து

அத்தனை நல்கருள காணா அதிமூடர்

பொய்த்தகு கண்ணான் நமரென்பர் புண்ணியர்

அத்தன் இவனென் றடிபணி வாரே.[1]

(ப. இ.) இயற்கைச் சிவபெருமான் குருவாய் எழுந்தருளி வந்து ஆருயிர்களை மலமகற்றித் தூய்மை செய்தருள்வன். அக் குருவே தன் திருவடியிணையையும் நல்கியருள்வன். இவ் வுண்மையினைக் காணும் பேறில்லாத புல்லறிவாளராகிய அதிமூடர், நிலையில்லாத மாயாகாரிய மாகிய ஊனக்கண் கொண்டு கண்டு சிவகுருவும் நம்மனோரில் ஒருவரே என்பர். அருட்கண் பெற்ற புண்ணியப் பேறுடையார் அத்தனாகிய சிவபெருமான் இவனே என்று, 'காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கிச் சிவசிவ' என்று ஓவாது ஓதி அவன் திருவடியை வணங்குவர். அத்தனை: அத்+தன்னை. அங்ஙனம் செய்தருளிய தன்னை; அத்தனாகிய சிவனை. சுத்தம் - புனிதம்; இயற்கை.

(அ. சி.) பொய்...என்பர்-அருட்கண்ணால் அன்றி ஊனக்கண் கொண்டு பார்க்கும் மூடர் சிவகுருவைச் சிவமாகப் பாவிக்காது மானிடரில் ஒருவர் என்பர்.

(6)

---

1. நெஞ்சினைத். அப்பர், 4. 23 - 9.

1554. உண்மையிற் பொய்ம்மை ஒழித்தலும் உண்மைப்பார்

திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்

வண்மையும் எட்டெட்டுச் சித்தி மயக்கமும்

அண்ணல் அருளன்றி யாரறி வாரே.

(ப. இ.) சிவகுரு உண்மையாகிய திருவடியுணர்வால் நிலையில்லதாகிய காரறிவாண்மை என்னும் அறியாமையை அகற்றுவன். அகற்றுதலும் காரணத்தின் நிலைபேறுடையதாய திண்மைமிக்க மாயாகாரிய நிலைமையும், இயற்கை உண்மை அறிவு இன்ப ஒண்மைச் சிவனார் அம்மாயையினைக் காரியப்படுத்தி, நாம் பயன்பெறும்படி நமக்குத் தந்தருளிய வண்மையும் புலனாகும். அறுபத்துநான்கு சித்திகளை எய்தும் மயக்கமும் அகலும். இவையனைத்தும் சிவபெருமானாகிய அண்ணலின் திருவருளாலாகும். இவ்வுண்மையினை அறிவார் மிகவும் அரியர்.

(அ. சி.) பொய்ம்மை அஞ்ஞானத்தை. உண்மைப் பார் திண்மையும் - உண்மையாகக் காணப்பட்ட உலகத்தின் மாய வலிமையும். எட்டெட்டு சித்தி மயக்கம் - 64 சித்திகளால் ஆகும் மயக்கமும்.

(7)

1555. சிவனே சிவஞானி யாதலாற் சுத்த

சிவனே யெனஅடி சேரவல் லார்க்கு

நவமான தத்துவ[1] நன்முத்தி நண்ணும்

பவமான தின்றிப் பரலோக மாமே.

(ப. இ.) சிவஞானமாகிய முற்றுணர்வைத் தந்தருளும் சிவகுரு சிவஞானியாவர். அவர் சிவனெனவே படுவர். ஆதலால் சிவகுருவை இயற்கை உண்மைச்சிவனே என நினைந்து அவர் திருவடியைச் சேரும் நற்பேறு பெற்றார்க்குத் தூவாமாயையின் காரியமாகிய அவ் வுடலுறுப்புக்கள் தூமாயையின் காரியமாக வேறுபடும். வேறுபடுதல் - சிறப்புறுதல். இதுவே ஈண்டு நவமான தத்துவம் என ஓதப்பட்டுள்ளது. 'உள்ளம் சிவனுடன் ஒன்றாகில் உடலும் அவனுடலாகும் இஃது 'உள்ளநினை வாலுணர்வாம் உற்றுணர்வால் தூய்மையுடல், வள்ளலுடன் அமைப்பன் வந்து' என்னும் முறைமையாலறிக. வழிப்பேறுகளாகிய முத்தியும் கைகூடும். பிறப்பும் அறும். விழுப்பேறாகிய பரலோகம் எனப்படும் வானோர்க்குயர்ந்த உலகமாகிய திருவடிப்பேறும் எய்தும்.

(அ. சி.) பவம் - பிறப்பு.

(8)

1556. குருவே சிவமெனக் கூறினன் நந்தி

குருவே சிவமென் பதுகுறித் தோரார்

குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்

குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

(ப. இ.) நந்தியாகிய முழுமுதற்சிவன், அருள்வீழ்ச்சியால் எழுந்தருளிவந்து ஆட்கொள்ளும் குருவே சிவன் என்று அருளினன். திருவருள் துணையால் குருவே சிவன் என்னும் மெய்ம்மையினைக்

தானெனை. அரூரர், 7. 100 - 1.

குறித்தோர் சிவனுமாய்ச் சிறப்பருள் தலைவனுமாய் நிற்பவராவர். அவரையே சிவகுருவென்பர். அச் சிவகுருவே நூலாலும் நூலாலுணரும் நோன்மை யறிவாலும் அறியவொண்ணாத சிவன் என்பர். நூலுணர்வு - சுட்டுணர்வு. நோன்மையுணர்வு - சிற்றுணர்வு. நுண்ணுணர்வு - முற்றுணர்வு. அருள்வீழ்ச்சி - சத்திநிபாதம்.

(9)

1557. சித்தம் யாவையுஞ் சிந்தித் திருந்திடும்

அத்தன் உணர்த்துவ தாகும் அருளாலே

சித்தம் யாவையுந் திண்சிவ மானக்கால்[1]

அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே.

(ப. இ.) அத்தனாகிய சிவபெருமான் தன் திருவருளால் ஆவிகளுக்கு உண்ணின்று உணர்த்தியருள்வன். அதனால் எண்ணமாகிய சித்தம் யாவற்றையும் உள்ளவாறு உணர்ந்திருந்திடும். அம் முறையில் எண்ணமானது இடையறாது சிவத்தையே நாடுதலால் எண்ண முதலிய கருவிகளனைத்தும் சிவக்கருவியாகச் சிறக்கும். அத்தனாகிய சிவபெருமானும் அவ் ஆவி தானாகவே அமர்ந்திடுவன். எண்ணம் - சித்தம்.

(அ. சி.) சித்த..ஆனக்கால் - பசுகரணம் எல்லாம் பதிகரணம் ஆனக்கால்.

(10)

1558. தானந்தி சூர்மையுட் சந்தித்த சூர்வைத்த

கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை

வானந்தி யென்று மகிழும் ஒருவற்குத்

தானந்தி யங்கித் தனிச்சுட ராமே.

(ப. இ.) தானே, சிவபெருமானென விளங்கும் நந்தியெங் கடவுள் வகுத்தருளிய சூலம் நோன்பு செறிவு அறிவு என்னும் இறவாத் தவமாம் நானெறியுள், அறிவு நெறியாகிய நன்னெறியின்கண் காணப்படுவதான திருவருள் முறைமையினை நல்கியருளியவன் நந்தியாகிய சிவபெருமான். அவனுடைய திருவருட் குறிப்பினை அறிவாரில்லை. அவனருளால் அறிவார்க்கு அவன் மேலாகிய சிவன் எனக் காணப்படுவன். அவ்வுண்மையினைக் கண்டு ஆவிகள் பெருமகிழ்வு கொள்ளும். அச் சிவனே மாலைக்காலத்து விளங்கும் அருட்சுடார்த் திருவிளக்காகவும் தோன்றியருள்வன்.

(அ. சி.) சூர்மையுள் - சன்மார்க்க ஒழுககத்துள். சந்தித்த - காணப்படுவதான. வானந்தி - மேலான நந்தி. அந்தி அங்கி - மாலைக்காலத்துத் தூபம் போன்றவன்.

(11)

1559. திருவாய சித்தியும் முத்தியும் சீர்மை

மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்

பொருளாய வேதாந்த போதமும் நாதன்

உருவாய் அருளா விடிலோர வொண்ணாதே.[2]

---

1. இந்நிலை. சிவஞானசித்தியார், 8. 2 - 24.

2. ஆரண. " 1. 2 - 18.

(ப. இ.) வாராத செல்வமாகிய திருவடிப்பேறும், வீடும் அவ்வவற்றின் சிறப்புக்களும் மயக்கமுறாவண்ணம் அருளுதலும், மெய்ப் பொருளுணர்த்தி பொய்ப்பொருளின் மயக்கறுத்தலும், அம் மெய்ப் பொருளை உள்ளவாறுணர்த்தும் திருநான்மறையின் முடிபும், அம் முடிபாற் பெறப்படும் சித்தாந்த நுண்ணுணர்வும் சிவகுரு வடிவெடுத்துச் சிவபெருமான் அருளாவிடின் ஒருவராலும் உணரவொண்ணாதென்க.

(அ. சி.) நாதன் உருவாய் - நந்தி குருவடிவாய் வந்து.

(12)

1560. பத்தியம் ஞானவை ராக்கிய மும்பர

சித்திக்கு வித்தாஞ் சிவோகமே[1] சேர்தலான்

முத்தியின் ஞான முளைத்தலால் அம்முளை

சத்தி யருள்தரில் தானெளி தாமே.

(ப. இ.) சிவன்பால் முழுமையன்பாம் பத்தியும், அப் பத்தியின் விளைவாம் திருவடியுணர்வும், அவ் வுணர்வால் ஏற்படும் வைராக்கியம் என்னும் பற்றுறுதியும் திருவடிப்பேற்றுக்கு வாயில்களாகும். இவற்றான் அவன் நான் ஆனேன் எனக் கருதுதலாகிய பாவனை உண்டாம். அப்பாவனையால் சிவனேயாவன். அதனால் வீடுபேற்றிற்கு வித்தாகிய திருவடியுணர்வு தோன்றும். அம் மெய்யுணர்வுத் தோற்றம் திருவருள் வழியாகக் கிடைக்கப் பெறுதலால் எளிதாயிற்றென்க.

(அ. சி.) முத்தியின் ஞான முளைத்தலால் - முத்தியடைய இச்சை உண்டாகலான். அம் முளை-அந்த இச்சை. சத்தி அருள்தரில் - திருவருட் சத்தி அருளில்.

(13)

1561. இன்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை

முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை

தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு

மன்னெய்த வைத்த மனமது தானே.[2]

(ப. இ.) மேலோதிய சிறப்புக்கள் எல்லாம் எய்துதற்குரிய தென்னாட்டகத்துப் பிறக்கும் இன்பப் பிறப்பினை முன்னமே எய்தும்படி அருள் செய்த முழுமுதல்வனாகிய சிவபெருமானை எம் தலைவன் என்று வழுத்துவோம். அவன் திருவடியை ஆருயிர் அடையும் செவ்வி அருளால் எய்துங்காலத்து அச் சிவன் தானே வெளிப்பட்டருள்வன். அத்தகைய

செவ்வி வாய்ப்பது அருளுக்குத் தனியிடமாக மனம் அமைந்தகாலத் தென்க. அங்ஙனம் அமைந்த மனம் ஏனைக் கருவிகளுக்குத் தலைமைப்பாடு எய்தும்.

(அ. சி.) இன் எய்த - இன்பம் எய்த. முன் எய்த - பிறப்பினை எய்த வைத்த. தன் எய்தும் - தன்னை அடையுங் காலத்தில். மன்.....தானே - பெருமை எய்த வைத்த உள்ளத்தின்கண்ணே. (மனம்: உள்ளத்துக்கு ஆகுபெயர்.)

(14)

---

1. கண்டவிவை. சிவஞானசித்தயார், 9. 3 - 1.

" முத்தி. சம்பந்தர், 2. 66 - 3.

இந்திரிய. சிவஞானசித்தியார், 10. 2-1.

1562. சிவமான ஞானத் தெளியவொண் சித்தி

சிவமான ஞானத் தெளியவொண் முத்தி

சிவமான ஞானஞ் சிவபரத் தேயேகச்

சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே.

(ப. இ.) சிவமாக்கும் திருவடியுணர்வு சிவஞானம் எனப்படும். சிவஞானம் எனினும் திருவருள் எனினும் ஒன்றே. அத் திருவருளால் ஆருயிர்களின் அறிவு தெளிவுபெறும். அறிவு தெளியச் சிறந்த சித்திகள் கைகூடும். பற்றுறுதியாகிய வீடும் எய்தும். இவற்றால் சிவம் தானாதல் என்னும் சூழும் பொருந்தும். அத்திருவருளே தவலில் சிவ இன்பமாகும்.

(அ. சி.) சிவபரம் - சாயுச்சியம்.

(15)

1563. அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்

செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்

மறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை

பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே.

(ப. இ.) திருவருட்டுணையால் உலகியல் உண்மை முற்றும் அறிந்துணர்ந்தேன். சிவன் திருவடிக்குப் பேரன்பு வைத்துத் திருமுறையும் சித்தாந்த நூல்களும் ஓதியுணர்ந்து திருவருள் பெற்றேன். சிவனடி நினைக்கும் சிறந்த அறிவில்லாரின் பெருவாழ்வையும் மறந்தொழிந்தேன். அதனால் சிறப்பிலார் தம் திறத்துச் சேர்வை நூங்கிற்று. நூங்கவே பிறவியினின்று விடுபட்டேன்.

(அ. சி.) அகலிடம் - உலகம் முழுதும். செறிந்துணர்ந்து - அன்பினால் உணர்ந்து. மதி மாண்டவர் - அறிவு கெட்டவர்.

(16)

---

2. திருவடிப்பேறு

1564. இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே

பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்

சிவந்த குருவந்து சென்னிகை வைக்க

உவந்த குருபதம் உள்ளத் துவந்ததே.

(ப. இ.) திருவருள் வலத்தால் ஒத்து எழும் அன்பின்கண் அவ்வன்புருவாக விழைந்து எழும் சிவபெருமானை, மேலும் மேலும் முறுகி வளரும் அன்பின்வழிச் சென்று தொழுவர். தொழுவே, சிவபெருமான் சிவகுருவாக வந்து மும்மலங்களை அகற்றுவர். அகற்றி உச்சியின்கண் திருக்கையினைப் பொருந்துமாறு வைத்தருளுவர், அருளவே அவர்தம் திருவடி ஆவிகளின் உள்ளத்து இடனனைமந்து வெளிப்பட்டு அமரும்.

(அ. சி.) பசைந்து எழும் - விரும்பித் தோன்றுகிற. பாசத்துள் ஏக - அன்பின்வழிச் செல்ல. சிவந்த - அஞ்ஞானத்தைக் கோபித்த

சென்னி கை வைக்க - தலையில் கை வைத்துச் செய்யும் தீக்கையைச் செய்ய.

1565. தாடந்த போதே தலைதந்த[1] எம்மிறை

வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு

வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்

பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே[2]

(ப. இ.) எம் தலைவனாகிய சிவபெருமான் தன் திருவடியிணையினை எம் உள்ளத்தே பதித்தபொழுதே, இதுகாறும் பொறிபுலன்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த எமக்கு அவைகள் அடிமைப்படும்படியான தலைமையையும் தந்தருளினன். அறியாமையை ஈரும் வாளாகிய திருவடியுணர்வினையும் தந்தருளினன்; முடிவுபேறில்லாத திருவடிப்பேற்றினையும் தந்தருளினன்; திருவருளால் தன் திருவடியை வெளிப்பட்டுச் சிவகுருவாய் எழுந்தருளி வந்து எம் முடிமேல் வைத்தருளினன்.

(அ. சி.) தாள் தந்த போதே - திருவடியை என் சென்னிமிசை சூட்டினபோதே. தலைதந்த - தலைமைத் தன்மை வந்தது. வாள் தந்த ஞான - வாள் போலும் அஞ்ஞானத்தை ஈரும் ஞான. வீடு அந்தமின்றியே ஆள்கென - முத்தி

இன்பத்தை என்றும் நித்தியமாய் அனுபவி என்று அருட்பாடின் - அருளினால். முடி வைத்து - தலையில் திருவடியைச் சூட்டி. பார் வந்து - பூமியிலே குருவடிவாய் வந்து.

(2)

1566. தானவ னாகிச் சொரூபத் துவந்திட்டு

ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின

ஏனைய முத்திரை யூந்தாண்ட நன்னந்தி

தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே.

(ப. இ.) திருவருளால் ஆருயிர் சிவமாகிச் சிவனதுண்மை யறிவின்ப நிலையினில் நிற்கும். அப்பொழுது மலமாயை கன்மம் மாயேயம் என்னும் நான்கினது இயல்புகளும் நீங்கின நிலையினை எய்தும். சிவன் திருவடிக்கு அடிமையாம் அடையாளப் பொறியினை நல்கி நல்ல நந்தியெங்கடவுள் ஆண்டனன். அச் சிவபெருமான் திருவடி சூட்டி ஆருயிர்களை அருள்வழி நிலைப்பித்தது மெய்ம்மையேயாகும். இது, நிலைப்பித்தல் திருவருளாகிய பிரதிட்டாகலையின் அருட்செய்கையாகும். இக் கலைகள் ஐவகை என்ப. அவை: நீக்கல், நிலைப்பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பாலாக்கல் என்ப. சொரூபம் - இயற்கை. முத்திரை - பொறி.

(3)

1567. உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்

திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்

கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த

சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே.[3]

---

1. இந்திரிய. சிவஞானசித்தியார், 10. 2-1.

2. ஆவா. 8. திருத்தெள்ளேணம், 7.

3. கயல்மாண்ட. 8. திருத்தெள்ளேணம், 11.

(ப. இ.) சிவகுருவாய் வந்து திருவடி சூட்டியதும் பிறப்பிற் கேதுவாய் உரையும் உணர்வும் அகன்றன. அகலவே, உயிரும் உயிருக்குயிராகிய சிவனும் என்று வேறுபடுத்திப் பேசும் பேச்சும் அற்றது. திரையும் கடலுமாகிய ஒன்றனையே திரையெனவும். கடலெனவும் இரு பெயரால் பேசுகின்றோம். கடல் தெளியாத நிலைமையில், கடல் தெளிந்த இடத்தில் இரண்டு பெயரில்லை. அதுபோல் மேற்கூறிய உயிரும் சிவனும் என்பதாகிய பேச்சு அற்றதாகும். ஆனால் ஆருயிரும் சிவனும் மலர்மணம் போல இயையும் இருபொருள்கள். அதனால் கடல் போல் ஒன்றெனும் பெயர் சிவத்தின்மாட்டு

இன்றாகும். ஆனால் புணர்ப்பு என்னும் பெயர் உண்டாகும். எல்லையிலாத நுண் ஓசை, நினைவோசை, மிடற்றோசை, செவியோசையாகிய நான்மையும் சத்தாதி நான்கு எனப்பட்டன. அவை ஓசை மெய்யாகிய நாதத்தைக் குறிக்கும். அந்நாதத்தைக் கடந்து விளங்குகின்ற சிவ இயற்கையின்கண் ஆருயிர்களாகிய நம்மை நுகர்வித்தருளினன். அதனால் வாய்நிறை உணவினர், நாவால் உரையாட இயலாமைபோல யாமும் பேசாநிலை பெற்றனம் என்க.

(அ. சி.) உயிர் பரமற்று - சீவன் சிவன் என்கிற வேறுபாடின்றி. சொல்லிறந்தோம்-மவுன நிலையடைந்தோம்.

(4)

1568. குரவன் உயிர்முச் சொரூபமுங் கைக்கொண்டு

அரிய பொருள்முத் திரையாகக் கொண்டு

பெரிய பிரானடி நந்தி பேச்சற்று

உருகிட என்னையங் குய்யக்கொண் டானே.

(ப. இ.) சிவகுருவாய் எழுந்தருளும் ஆண்டவன், ஆருயிரினுடைய பருமை நுண்மை முன்மை (காரணம்) என்னும் மூவகை யுடம்புகளையும் இரவலை ஏற்பதுபோன்று தன் உடைமையாக ஆக்குகின்றனன். ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் காணிக்கையாகக் கொள்கின்றனன். சிவபெருமான் திருவடியைப்பெற்ற நந்தியெங் கடவுளர் என்னை உய்யக் கொண்டருளினன். அதனால் உரையற்று உள்ளம் உருகிக் கண்களில் இன்பவெள்ள நீர் பெருகப் பள்ளத்து வெள்ளம்போல் அமைதி ஆக்கினன்.

(அ. சி.) உயிர்முச் சொரூபம் - தூலம், சூக்குமம், காரணம். அரியபொருள் முத்திரையாக - உடல், பொருள், ஆவி மூன்றையும் காணிக்கையாக. பேச்சற்று - மவுன நிலையில் இருந்து.

(5)

1569. பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே

மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்

காச்சற்ற சோதி கடன்மூன்றுங் கைக்கொண்டு

வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே.

(ப. இ.) சொல்லவொண்ணாததாகிய திருவடி இன்பப் பெரு வாழ்வில் ஒடுங்கச்செய்து, (மாச்சு : மாய்த்து - ஒடுங்கச்செய்து) உரிமையற்ற அடிமையாகிய என்னைச் சிவமாக்குதலாகிய அப்பாலாக்கலைச் செய்தருளினன். செய்யவே பிணிப்புத்தன்மையாகிய பசுத்துவம் அழியும்.

அழியவே கொடுமையில்லாத திருவருள் ஒளி வெளிப்படும். வெளிப்பட்டு உள்ளம், உரை, உடல் என்னும் முக்கருவியினாலும் இயற்றப்படும் படர்தல் பாடல் பாடுகிடத்த (பணிதல்) லாகிய மூன்று திருத்தொண்டுகளையும்

கைக்கொண்டொழுக அருளும். பிணிமுனைப்பால் எழும் தற்புகழ்ச்சியினை மாளச்செய்யும் திருவடியைத் தந்து என்றும் ஒன்றுபோல் நின்று நிலைபெறுமா றருளும். பிணி - கட்டு: ஆணவம்.

(அ. சி.) மாச்சற்று - ஒடுங்கச் செய்து. மாள்வித்து - பசுத்துவத்தை ஒழித்து. காச்சற்ற - கொடுமையில்லாத. கடன் மூன்றும் - முக்கரணங்களால் செய்யப்படும் காரியங்கள். வாச்சபுகழ் - தற்புகழ்ச்சி.

(6)

1570. இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்

பதிவித்த பாதப் பராபரன் நந்தி

கதிவைத்த வாறும்மெய் காட்டிய வாறும்

விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே.

(ப. இ.) அடியேனுடைய உள்ளத்தும் கள்ளமிலாக் கண்ணகத்து, உச்சியிலும் தன்னுடைய அரும்பெறல் திருவடியைப் பதிவித்த தொழப்படும் தேவர் தொழப்படும் பெரும்பொருள் நந்தி திருவடிப்பேறாகிய கதியமைத்தவாறும், சிவகுருவாய் எழுந்தருளிவந்து மெய்ப்பொருள் உணர்த்தியவாறும், திருமறை திருமுறைகளாகிய செந்தமிழ் வேதாகம விதி வைத்தவாறும் அவனருளால் அல்லாமல் ஆவிகளின் சுட்டறிவு சிற்றறிவுகளான் வெளிப்படுத்திக் கூற ஒண்ணா தென்க.

(7)

1571. திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்

பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்

குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்

கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே[1]

(ப. இ.) அடியேன் முடியில் திருவடியை வைத்தருளலும், திருக்கடைக்கண் நோக்கமருளலும் செய்தருளித் தன் பெருவடிவாகிய சிவ நிறைவினைத் தந்தருளியவன் பெரும்பொருள் நந்தியாகும். இவ்விரண்டும் முறையே திருவடி தூக்கை எனவும் திருநோக்கத் தூக்கை எனவும் கூறப்படும். அந் நந்தியெங்கடவுளைக் குருவடிவிற் கண்டனம். அவனே நம் பிறப்பாகயி கருவழிவு ஆற்றுந் தலைவனாவன். அவனே கண்ணனைய காதலனாகிய கோவும் ஆவன். ஆவனருளால் அவன் திருவடியைக் கண்டுகொண்டேன்.

(8)

1572. திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்

திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்

திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்

திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

---

1. தேடிக். அப்பர், 4. 9 - 92.

(ப. இ.) திருவடியுணர்வு ஆருயிர்களை மும்மலப் பிணிப்பினின்றும் செம்மையுற விடுவிக்கும். அவ் வுணர்வே கிடைத்தற்கரிய திருவருட் சித்திகளை எய்துவிக்கும். அதுவே சிவ வுலக வாழ்வினைச் சேர்ப்பிக்கும். அவ் வுணர்வே சிவமாம் பெருவாழ்வையும் கூட்டுவிக்கும்.

(9)

1573. மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை

மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்

பால்வைத்த சென்னிப் படரொளி வானவன்

தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே.

(ப. இ.) மேலோதிய திருவருள் ஆணையின்வழி ஆருயிர்கள் செம்மையுற ஒழுகாவிட்டால், பண்டைப் பழவினைகளாகிய எஞ்சு வினைகள் உள்ளத்தை மயக்கி ஆசைக்குழியுள் வீழ்த்திப் பிறப்பு இறப்பிற்படுத்தி மாயமதாக்கும். பால்போலும் பிறையினைச் சூடியருளிய திருமுடியினையுடைய அறிவுப் பேரொளிப் பெருமானாகிய சிவபெருமான் திருவடி சூட்டியவாறும், செந்நெறிக்கண் நிற்பித்தவாறும் திருவருளே.

(10)

1574. கழலார் கமலத் திருவடி என்னும்

நிழல்[1] சேரப் பெற்றேன் நெடுமால் அறியா

அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானுங்

குழல்சேரும் மின்னுயிர்க் கூடுங் குலைத்ததே.

(ப. இ.) ஆண்மை அடையாளக் கேண்மையாம் கழல் அணிந்துள்ள செந்தாமரையனைய திருவடி என்று சிறப்பித்துச் சொல்லப்படும் என்றும் பொன்றாப் பொருள் நிழல் சேரப்பெற்றேன். மேலும் நீண்ட திருமாலும் காணமுடியாத அழல்வண்ணமாய் எழுந்தருளி வெளிப்பட்டு நின்றவன் சிவன். அவனே உயிர்க்கு உயிராக நிற்பன். அங்ஙனம் நிற்கின்ற அவன் அம்மையோடும் கூடி அப்பனாகத் திகழ்வன். அதுவும் உயிருக்கு உயிராய் உணர்வின்கண் திகழ்வன். அந்நிலையில் என் உயிர் நிலைக்களமாம் உடம்பும் நீங்கிற்று. குழல் சேரும் மின்னும் - கரிய கூந்தலையுடைய மின்னொளி போலும்

அம்மையும். கூடும்: என்பதன்கண் உள்ள உம்மையைப் பிரித்து மின் என்பதனொடு கூட்டுக. ஆதிப்பிரான்: ஆதியாகிய சிவன்.

(11)

1575. முடிமன்ன ராய்மூ வுலகம தாள்வர்

அடிமன்னர் இன்பத்[2] தளவில்லை கேட்கின்

முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்

குடிமன்ன ராய்க்[3] குற்ற மற்றுநின் றாரே.

---

1. சுழலார். அப்பர், 4. 93 - 9.

2. என்னிலாரு " 5. 21 - 1.

" தஞ்சாக. 11. ஐயடிகள், 22.

" படிமுழுதும். " 10.

3. நாமார்க்கும். அப்பர், 6. 98. 1.

" மூவுருவின். " " " 6.

(ப. இ.) நிலவுலகில் முடிசூடு மன்னராய்த் திகழ்ந்து வாழினும் சிவனடியார் பெறும் மாறா இனபம் அவர்களுக்கு இல்லை. அம் மன்னர்கள் உம்மை வாழ்வாகிய ஒளியுலக வாழ்வு எய்தினும் தேவராவர். (அந்நிலை மூண்டும் பிறப்பினைத் தரும்.) சிவபெருமான் அடியவராய் வாழ்பவர் தனிமுடி கவித்து ஆளும் அரசினும் இனியனாகிய சிவனடியின்பத்தினை இம்மையே நுகர்வர். அச் சிவனுக்கு நிலைபெற்ற குடியாக வாழும் அடியார் அறுபகை செற்று ஐம்புலன் அடக்கி நானெறி ஒழுகி மும்மலக் குற்றம் அற்று நின்றனர். அதனால் இருவகையாம் பிறப்பிறப்பற்று ஒன்றாம் சிறப்புற்றுத் திருவடியின்பத்து வாழ்வர்.

(12)

1576. வைத்தேன் அடிகள் மனத்தினுள் ளேநான்

பொய்த்தே யெரியும் புலன்வழி போகாமல்

எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு

மெய்த்தேன் அறிந்தேனவ் வேதத்தின் அந்தமே.[1]

(ப. இ.) திருவருளால் திருவடியினிடத்தில் உள்ளம் வைத்தேன். அதனால் அவன் அருட்கண் பெற்றேன். அவ் வருட்கண் துணையினால் நிலையிலாப் பொருள்களை நிலையுள்ளனவாக விளக்கும் ஐம்புலன்வழிப் போகாமல் நின்றேன்.

நிற்கவே இருவினையின்கண் உழன்று பிறப்பு இறப்பு எடுத்து இளைத்துப்போகும் தன்மையினை மாற்றுநிலை எய்திற்று. அதனால் உண்மைத் திருவடியின்பத்தேனை உணர்ந்தேன். அத் தேனே உண்மையறிவின் முடிபாகும். வேதாந்தம் - உண்மையறிவின் முடிபு. தேனே சிவன் வண்ணம் தேற்றுமருள் வண்ணம்பால், மானே உயிர் பளிங்கு மற்றிரண்டும் சாரஇன்பமாம்.

(அ. சி.) அடிக்கண் - திருவடி ஞானத்தை பொய்....வழி - பொய்ப் பொருள்களில் பற்றுவைக்கும் ஐம்புலன் வழி. எய்த்தேன் - ஒழித்தேன். மெய்த்தேன் - உண்மை இன்பம். வேதத்தின் அந்தம் வேதத்தில் கூறப்பட்ட முடிவான பொருள்.

(13)

1577. அடிசார லாம்அண்ணல் பாத மிரண்டும்

முடிசார வைத்தனர் முன்னை முனிவர்

படிசார்ந்த இன்பப் பழவடி வெள்ளக்

குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே.

(ப. இ.) நன்னெறிச் செல்வார் திருவருட்டுணையால் திருவடி சேர்வர். பண்டைப் பழவடியாராகிய முழுநூறு பூசிய முனிவர்கள் சிவபெருமான் திருவடியிரண்டனையும் தம் முடிக்கு அணியாக அணிந்தனர். படிமுறையான் ஏற்றமாக எய்தும் இன்ப நிறைவினராகிய அடியாருள் இணங்கி வாழும் இன்பவெள்ளத்துள் மூழ்குதலே நன்னெறிச் செல்வார் கொள்கையாகும். நன்னெறி - சன்மார்க்கம்.

(அ. சி.) படிசார்ந்த - சோபான முறைப்படி அடையப்பட்ட. பழவடி இன்ப வெள்ளக்குடி - பழமையான மோக்க இன்பத்துள் மூழ்கும் அடியாரோடு. சார்நெறி - சேர்தற்குரிய சன்மார்க்கம்.

(14)

1.நானேயோ. 8. திருவேசறவு. 10.

1578. மந்திர மாவதும் மாமருந் தாவதுந்

தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்

சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்

எந்தை பிரான்தன் இணையடி தானே.[1]

(ப. இ.) எந்தைபிரானாகிய அம்மையப்பரின் இணையடிகளே உடல் நோய், உளநோய், ஊறு, பகை, பிறப்பு முதலிய எல்லாவகைத் துன்கங்களையும் அறவே அகற்றும் திறமார் மந்திரமாகும்; பெரிய நன்மருந்துமாகும்; நூலுணர்வுமாகும்; உயர்ந்த இன்பமூட்டும் ஒப்பிலா ஒளி நிலங்களுமாகும்; உயிர், உணர்வு, உள்ளம், உடல், உடை, உறையுள் ஆகியவற்றிற்கு

அழகினைத் தருவதுமாகும்; திருவடி சேர்க்கும் தூய நெறியுமாகும். திருவடி என்பது, 'சிவயநம' இதன்கண் ஆவியின் அடையாளமாகிய 'ய' கரத்தின் முன்னும் பின்னும் உள்ளனவாகிய வகரமும் நகரமும் அண்ணல் திருவடி இரண்டுமாகும். வகரம் வனப்பாற்றல். நகரம் நடப்பாற்றல். வகரம் சிவத்துடன் கூட்டும். நகரம் உடலுடன் கூட்டும். வகரம் வலது திருவடி. நகரம் இடது திருவடி.

(அ. சி.) இம் மந்திரக் கருத்தைத் திருஞானசம்பந்த சுவாமிகள் எடுத்து ஆண்டுள்ளார். திருவடி ஞானமே எல்லாமாம் என்பது இம் மந்திரக் கருத்து.

(15)

---

3. ஞாதுரு ஞான ஞேயம்

(காண்பான் காட்சி காட்சிப்பொருள்)

1579. நூங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்

பாங்கான பாசம் படரா படரினும்

ஆங்கார நூங்கி யதனிலை நிற்கவே[2]

நூங்கா அமுத நிலைபெற லாமே.

(ப. இ.) கட்டிலும் ஒட்டிலும் ஆருயிர்களை என்றும் விட்டு நூங்காத அருளால் உணரப்படும் பொருளாகிய முழுமுதற் சிவத்தின் விழுமிய பேரின்பத்தே அழுந்தி நிற்கப் புல்லுமலமாகிய ஆணவப் பசை தொடராது. ஒருகால் தொடர நேரினும், திருவருள் துணையால் ஆங்காரம் நூங்கி அத் திருவருள் நினைவாகவே மெய்யடியார் நிற்பர். நிற்கவே அவர்கட்குப் பேரின்பப் பெருவாழ்வு நூங்காது நிலைபெறும். பசை - வாசனை. அமுதம்-பேரின்பம். ஞேயம் - உணரப்படும் பொருள்.

(அ. சி.) ஞாதுரு - அறியும் ஆன்மா. ஞானம் - அறியும் அறிவு. ஞேயம் - அறியப்படு பொருள் பாங்கான பாசம் - சகச மலம், ஆணவம். ஆங்.....கவே - ஆங்காரத்தை அடக்கி மவுனம் சாதிக்கவே. நூங்கா அமுத நிலை - அழியாத இன்ப நிலை.

(1)

---

1. மந்திர. சம்பந்தர், 2. 66 - 1.

" பேரா யிரம்பரவி. அப்பர், 6. 54. 8.

இங்குளி. சிவஞானபோதம். 10. 2 - 3.

1580. ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நின்றிடும்

ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்

ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்

ஆயத்தின் நின்ற அறிவறி வாறே.

(ப. இ.) திருவருள் துணையால் ஞேயமாகிய திருவடிப்பேற்றில் உறைந்து நின்றோர்க்கு, முற்றுணர்வாகிய சிவஞான முதலியன நிலை பெறும். திருவடியுணர்வாம் திருவருள், அம் முற்றுணர்வு நல்கும் வீடாகிய சிவபெருமானுடன் பிரிப்பின்றி நிற்கும். அத்தகைய திருவருட் போற்றல் திருவடியைச் சார்வர். அவரே ஆயமாகிய சிவனடியார் திருக்கூட்டத்துடன் இணங்கித் தொண்டுபுரிவர். அதுவே ஆண்டவனை அடையும் நன்னெறியினைப்பற்றி வாழும் அறிவினை நல்கும் வாயிலினைப் பயப்பதாகும் அவ் வறிவுடையவரே சிறந்த நிறைந்த அறிவராவர்.

(அ. சி.) ஞேயத்தே நின்றோர்க்கு - மெய்ப்பொருளை ஆராய்வோர்க்கு. ஞேயத்தின்....வீடாகும் - மெய்ப்பொருளை அறிந்த ஆன்மாவின் அறிவே முத்தியைப் பயக்க உதவியாகும். ஞேயத்தின்.... ஞேயத்தை - சத்தியையும் சிவத்தையும். ஆயத்தினின்ற - சிவமான தன்மையின்.

(2)

1581. தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்

தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு

தானென்ற பூவை [1]யவனடி சாத்தினால்

நானென் றவனென்கை நல்லதொன் றனறே.

(ப. இ.) இருவகை அறிவுப்பொருள்களுள் பேரறிவுப் பொருளாகிய அவன் என்றும், சிற்றறிவுப் பொருளாகிய தானென்றும் விதந்து மொழியப்படும் உண்மைப் பொருள்கள் இருவேறு வகையினவாம். பேரறிவென்பது தானே விளங்கும் தன்மைவாய்ந்த இயற்கை அறிவு; சிற்றறிவென்பது பேரறிவு, உடன் கலந்து விளக்க விளங்கும் தன்மை வாய்ந்த இயற்கை அறிவு. அவன் - சிவன். தான் - ஆருயிர். தான் அவன் என்னும் இவ் விரு நிலைமையினையும் ஆருயிர் அருட்டுணையால் தம் முணர்வில் காண்பதாகும். அங்ஙனம் கண்டபின் ஆருயிர் தன்னை ஒரு பூவாம் நிலைமைக்குக் கொண்டுவந்து அப் பூவை அவன் திருவடியில் சாத்தும். அங்ஙனம் சாத்தினால் நானென்றும் அவன் என்றும் வேற்றுமையுறக் கூறாது மலர்க் கூந்தல் என ஒற்றுமையுறக் கூறுவது போல் உடையான் அடிமை என ஒருமையுறக் கூறுவர். அதுவே நன்னெறி நான்மையின் நன்மையாகும். அடிமை என்னும் ஒரு சொல்லே இரு பொருள் புணர்ப்பினை உணர்த்தும் எழிலுடையதாகும், மாணவன் என்பது போன்று.

(அ. சி.) தத்துவம் - உண்மைப் பொருள். இரண்டும் தனிற்கண்டு சிவத்தைச் சூவனிற் கண்டு. தானென்ற பூவை - ஆன்மாவை. நானென்று அவனென்கை-சிவன் சூவன் என்று பிரித்துக் கூறல்.

(3)

---

1. தம்மிற். திருக்களிற்றுப்படியார், 44.

1582. வைச்சன வாறாறு மாற்றி யெனைவைத்து

மெச்சப் பரன்றன் வியாத்துவ மேலிட்டு

நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்

அச்சங் கெடுத்[1]தென்னை யாண்டனன் நந்தியே.

(ப. இ.) ஆவிகள் சிவபெருமானைக் கூடுதற்பொருட்த் துணைக் கருவிகளாக அமைத்துக் கொடுத்த முப்பத்தாறு மெய்களும் ஆவியின் வழிச் செல்லாது ஆவிகளைத் தன்வழி இழுத்துத் தடுமாற்றத்துக்கு உட்படுத்தித் தாம் தலைமையாக நிற்கின்றன. ஆவிக்கு இவைகள்களையாகும். இக் களைகளைக் களைந்து ஆவியை வளர்த்தெடுப்பது திருவருளின் சீர் ஆகும். அம் முறையே ஆண்டவன் திருவடிக் கண்ணும் ஆவியை அத் திருவருள் நிலைப்பிக்கும். அப்பொழுது அடக்கமாகிய செறிவினை ஆவியடையும். செறிவு வியாபகம்; வியாத்துவம். சிவம், நிறைவாகிய வியாபகமாக இருக்கும். ஆவி அச் சிவமாம் பெருவாழ் வெய்தும். திருவடியுணர்வாகிய ஞேயத்தால் எனக்குள்ள பிறப்பு இறப்பாகிய அச்சத்தைக் கெடுத்தனன். கெடுத்து என்னையும் ஆண்டு கொண்டனன். அவனே நந்தியாகிய சிவபெருமான்.

(அ. சி.) ஆறாறு - 36 தத்துவங்கள். மாற்றி - களைந்து. எனை வைத்து - என்னை நிலைக்கச் செய்து. பரன்றன் வியாத்துவம் மேலிட்டு சிவத்தின் வியாபகம் மேலிடும்படி செய்து. நிச்சயமாக்கி சிவமாம் தன்மை எய்த வைத்து. ஞேயத்தால்-அச் சிவத்தினால்.

(4)

1583. முன்னை யறிவறி யாதஅம் மூடர்போற்

பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்

தன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்து

என்னை யறிவித் திருந்தனன் நந்தியே.

(ப. இ.) சிவதூக்கை பெறுமுன், அறிய வேண்டிய உண்மைகளை அறியாதிருந்த அறிவிலார்க்குச் சிவதூக்கைக்குப் பின் அறிவறியாமை என்னும் இரண்டினையும் சிவன் அழித்தனன். தன்னையாகிய ஆவியை அறிய

அவ் வாவியைச் சிவமாக்கினன். ஆக்குதலும் சிவத்துடன் கூடி ஆவி தன்னையும் சிவத்தையும் காணும். அவ்வாறு காணும்படி அருளினன் சிவபெருமான்.

(அ. சி.) முன்னை - தூக்கை பெறாமுன்னர். பின்னை - தூக்கை பெற்றுப் பாசம் ஒழிந்தபின். அறிவறியாமையைப் பேதித்தான் - அறிதலும் அறியாமலிருத்தலும் என்னும் தன்மையை ஒழித்தான். தன்னை அறியப் பரனாக்கி - ஆன்மாவாகிய தன்னை உணரச் சிவமாக்கி. தற்சிவத்து - அந்தச் சிவனிடத்திலே. என்னை - ஆன்மாவை.

(5)

1584. காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்

கோணாத போகமுங் கூடாத கூட்டமும்

நாணாத நாணமும் நாதாந்த போதமுங்

காணா யெனவந்து காட்டினன் நந்தியே.[2]

---

1. விச்சைதான். 8. சுட்டறுத்தல். 29.

2. இந்துவில், சிவஞானபோதம், 9. 3 - 1.

(ப. இ.) சிவபெருமான் ஆவிகளுக்குக் காணாத கண்ணாகிய அருட்கண் அளித்தனன். மேலும் கேளாத கேள்வியாகிய அறிவுப் பொறிமறை அருளினன். அஃதாவது சின்முத்திரை உபதேசம். குறைநிறைதலாகிய கோணலில்லாத சிவ வாழ்வினை அருளினன். போக்கும் வரவுமில்லாத பொருவறும் புணர்ப்பு அருளினன். இயற்கை நாணமாகிய அடிமைநிலை அருளினன். நாதமுடிவாகிய திருவடியுணர்வையும் சேர்த்தனன். இவை அனைத்தையும் காண்க என்று கண்டு காட்டினன். அவன் நந்தியெம்பெருமானவன். அறிவுப்பொறி - சின்முத்திரை. அஃதாவது பெருவிரலும் ஆட்காட்டி விரலும பிரிப் பின்றிப் புணர்ந்து ஒன்றாயநிற்க நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் மூன்றும் முறையே வினை மாயை ஆணவக் குறிப்புணர்த்தி நிற்பதாம்.

(அ. சி.) காணாத கண் - ஞானக் கண். கேளாத கேள்வி உபதேச மொழி. கோணாத போகம் - குறைதல் நிறைதல் இல்லாத சிவபோகம். கூடாத கூட்டம் - பிரிதலும் கூடுதலும் இல்லாத சேர்க்கை. நாணாத நாணம் - சொல்ல முடியாத வார்த்தை; ஆனால் நாணத்தால் அல்ல. இதனைத் தாயுமானவர்:

"அவன்

சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி

சொன்னசொல் ஏதென்று சொல்வேன் - என்னைச்

சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி

முன்னிலை ஏதுமில் லாதே - சுக

முற்றச்செய் தேஎனைப் பற்றிக்கொண்ட டாண்டி

பற்றிய பற்றற உள்ளே - தன்னைப்

பற்றச்சொன் னான்பற்றிப் பார்த்த இடத்தே

பெற்றதை ஏதென்று சொல்வேன் - சற்றும்

பேசாத காரியம் பேசினான் தோழி."

என்ற விளக்கியுள்ளார்.

நாதாந்த போதம் - நாதமுடிவான ஞானம்.

(6)

1585. மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடும்

மோனங்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும்

மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்

மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே.

(ப. இ.) வாய்வாளாமையாகிய மோனம் கைவந்தோர்க்கு, திரு வடிப்பேறும் கிட்டும்; அவர்க்குச் சித்தியாகிய திருவருள் நிலையும் கைகூடும்; அவர்க்குச் சொல்லிறந்த மறையாகிய சிகரம் கைகூடும். இதனை அசபாமறை என்பர். இத் திறத்தார்க்கு ஐந்தொழிலும் ஆண்டவன் அருளால் செய்தல் கூடும்.

(அ. சி.) ஊமையாமொழி - பேசாத மந்திரம்; இதனை அசப மந்திரம் என்னும் கூறுப. ஊமை எழுத்து - பிரணவம். ஐங்கரும்-ஐந்தொழில்கள்.

(7)

1586. முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றின்பால்

வைத்த கலைகால் நான்மடங் கான்மாற்றி

உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே

பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே.

(ப. இ.) சிவதூக்கையுற்ற நன்னெறிச் செல்வர், பொறியாகிய முத்திரை (622, 1495) மூன்றினாலும் இடப்பால் வலப்பால் நடுநாடி ஆகிய மூன்றினும் செல்லும் உயிர்ப்பினில் வீணாக வெளியாகும். நால் விரல் அளவினை உள்நிறுத்தல் செய்வார். அங்ஙனம் செய்யும்படி பழக்கிய பேரின்பச் சிவகுரு பாதத்தே நிலைபெறுவர். அதனால் அவர் மலப் பிணிப்பு அறும். அவர்கள் பிறந்திறக்கும் பெருந்துன்பப் பெற்றியினின்று நீங்குவர்.

(அ. சி.) முத்திரை மூன்று - சாம்பவி முதலிய முத்திரை மூன்று. மூன்றின்பால் - இடகலை, பிங்கலை, சுழுமுனைகளில். வைத்த...மாற்றி - பிராணவாயு நாலு விரற்கடை வூணாக வெளிச்செல்லுதலைக் கும்பகத்தால் நிறுத்தி. பொத்த மறுத்தோர் - பெந்தம் என்பது வலிந்து வந்தது. பெந்தம் - பந்தம், பாசம் ஒழிந்துள்ளோர்.

(8)

1587. மேலைச் சொரூபங்கள் மூன்று மிகுசத்தி

பாலித்த முத்திரை பற்றும் பரஞானி

ஆலித்த நட்டமே ஞேயம் புகுந்தற்ற

மூலச் சொரூபன் மொழிஞா துருவனே.

(ப. இ.) முன் ஓதிய காண்பன், காட்சி, காட்சிப்பொருள் என்னும் மூன்றும் திருவருட் பொறிச்சிறப்பால் உள்ளங்கொள்கின்ற சிறந்த மெய்யுணர்வுடையோன் சிவபெருமான் புரிந்தருளும் திருக்கூத்தினைத் திருவருட்கண்ணாற் கண்டு அம் மெய்ப்பொருளின் திருவடியிற் புகுவன், புகுந்த காரணத்தால் பருவுடம்பாகிய மூலப்பகுதியின் காரியங்கள் புடம்போட்ட பொன்போலவும் வேதித்த செம்புபோலவும் ஞானத்தின் திருவுருவாகும். அவனே சிவஞானி. பொறி - முத்திரை.

(அ. சி.) மேலைச் சொரூபங்கள் - அறிவு, அறிபவன், அறியப்படுபவன். சத்திபாலித்த முத்திரை பற்றும் - சிவசத்தி அருளிய சாம்பவியாதி முத்திரைகளைப் பற்றுகின்ற. ஆலித்த...புகுந்து விரும்பிய நடனத்தின் வழியே ஞேயத்திலே படிந்து. அற்றமூலச் சொரூபன் - மூலப் பிரகிருதி அற்ற சரூரத்தையுடைய ஆன்மா.

(9)

4. துறவு

1588. இறப்பும் பிறப்பும் இருமையும் [1]நீங்கித்

துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை

மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்கு

அறப்பதி காட்டும் அமரர் பிரானே.

(ப. இ.) ஒருவர்க்கு இறப்பும் பிறப்புமாகிய ஆற்றொணாத் துன்பத்து இருதன்மையும் நீங்கி இறைவனுக்கு அடிமையாகிய மெய்யுணர்வு பெறுதலே தமிழகத்துத் துறவும் தவமும் ஆகும். அந் நெறியினை உடங்கியைந்து உணர்த்தியருளியவன் சிவபெருமான் அவன் திருவடியிணையை மறவாதவராய் அவன்பால் பத்தராய் அவனையே பன்னியநூல் தமிழ்மாலையால் பாடுவார்கட்கு அறப்பதியாம் சிவவுலகத்தினைத் தந்தருள்வன், அமரர்பிரானாகிய சிவபெருமான்.

(அ. சி.) வாய்மொழிவார் - துதிப்பவர். அறப்பதி - முத்தியுலகம்.

(1)

1589. பிறந்தும் இறந்தும்பல் பேதைமை [2]யாலே

மறந்து மலஇருள் நீங்க மறைந்து

சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்

துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே.

(ப. இ.) பலவேறு ஆற்றல்களையுடைய ஆணவமலமாகிய பேதைமையினால் பிறந்தும் இறந்தும் சிவத்தை மறந்தும் அல்லலுறும் ஆருயிர்களின் மலவிருள் நீங்கும்படி உயிர்க்குயிராய் மறைந்து நின்று செவ்வி வருவித்து வெளிப்படுபவன் சிவன். அவ்வாறு வெளிப்படுங்காலத்துச் சிவகுரு எனப்படுவன். சிவகுருவாய் வந்து திருமுறை வழித் தீக்கை செய்து ஆருயர்களை ஆட்கொள்வன். ஆட்கொண்ட காலத்து அவ் வுயிர் சிவத்தைப் பேணும் அகத்துறவெய்தும். அவ் வுயிர் அதனால் அருட்சுடர்ப் பொலிவொடு திகழும்.

(அ. சி.) பிற...யாலே - பல பிறவிகளின் அனுபவத்தால். மறந்...நீங்க - ஆணவமலம் பரிபாகப்பட்டுத் தன் வலி அடங்க. மறைந்து சிறந்த - ஆன்மாவிலேயே மறைந்து இருந்து பின் பரிபாகத்தினால் வெளிப்பட்ட. சிவ.......பருவத்து - திருவருட்சத்தி பதியும் காலத்தில். துறந்த உயிர் - துறவுக்கு உரிய அறங்களைக் கைக்கொண்ட உயிர்.

துறவறங்களாவன : அருள் உடைமை, இனியவை கூறல், அடக்க முடைமை, தவம் உடைமை - செய்யப்படுவன நான்கு.

கூடாவொழுக்கம், அழுக்காறு, வெஃகல், புறங்கூறல், பயனில சொல்லல் - தவிரப்படுவன ஐந்து.

துறவு உடைமை, நிலையாமை உணர்தல், மெய்யுணர்தல் - உணரப்படுவன மூன்று.

---

1. இருமை. திருக்குறள், 23.

2. பிறப்பொன்னும். " 358.

அவா அறுத்தல் - வெறுக்கப்படுவது ஒன்று. ஆகப் பதின்மூன்றும் துறவு அறங்களாம்.

(2)

1590. அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்

உறைவது காட்டகம் உண்பது பிச்சை

துறவனுங் கண்டீர் துறந்தவர் [1]தம்மைப்

பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே.[2]

(ப. இ.) இல்லற நெறியினிற்பாருடன் இயைந்து அறவன் என்னும் திருப்பெயர் பெறுகின்றான். தான் எல்லார்க்கும் துணைபுரிந்தருள்வதன்றி எவர் துணையும் வேண்டாத தனியன். அவன் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினமையால் மாயாகாரிய உடம்பெடுப்பதாகிய பிறப்பில்லாதவன். அவன் ஊழிப்புறங் காட்டகத்து உறைபவன். அன்பரிடம் அன்பினையே பிச்சையாக ஏற்று உண்பவனும் அவனே. இந்நிலை பிறர்க்கென வாழும் பெருநிலையாகிய துறவு நிலையாகும். துறவு நிலையென்பது தீநெறிக்கட் செல்லாது நன்னெறிக்கட் செல்வது. இங்ஙனம் துறந்தார்தம் பிறவியை அறுத்திடும் பேரன்பினன் சிவன்; காண்பீராக.

(அ. சி.) காட்டகம் - உள்ளம். அறவன் - இல்லறவாசிகளுக்காக இல்லறங்களைக் கைக்கொண்டவன். துறவன் - துறவிகளுக்காகத் துறவு அறங்களையும் கைக்கொண்டவன்.

(30)

1591. நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்

நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்

நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு

நெறியின் நெருஞ்சில் முட்பாயகி லாவே.

(ப. இ.) அன்புநெறியாகிய இல்லறமும் அதன் முதிர்வாம் அருள் நெறியாகிய துறவறமும் இருகால்போல் அகம் புறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் நெறியாகும். அந்நெறியினைப் படைத்தவன் சிவனே. அந்நெறி நில்லாது தீநெறி நிற்பார் துன்புற்று அந் நெறிக்கு வருமாறு செய்ய நெருஞ்சில்போன்ற துன்ப நெறிகளையும் படைத்தளித்தனன். மெய்ந் நெறிக்கண் வழுவாது ஒழுகவல்லார்க்குப் பிறவித்துன்ப முதலிய எத்துன்பங்களும் எய்தா. அத் துன்பங்கள் நெருஞ்சிலாக உருவகப்படுத்தப்பட்டன.

(அ. சி.) நெறி - வழி. இம் மந்திரம் அறவழியிற் செல்லாதவர்களைத் துன்பம் சுடும் என்பதை உவமான முகத்தால் உணரவைத்தது.

(4)

1592. கேடுங் கடமையுங் கேட்டுவந் தைவரும்

நாடி வளைந்தது நான்கட வேனலேன்

ஆடல் விடையுடை அண்ணல் திருவடி

கூடுந் தவஞ்செய்த கொள்கையன் றானே.

---

1. துறந்தானை. அப்பர், 6. 66 - 6.

2. ஒப்பினை. 11. காரைக்காலம்மை, திருவாலங்காடு - 11.

" ஆதி. அப்பர், 5. 97 - 3.

(ப. இ.) சிவகுருவால் ஆட்கொள்ளப்பட்ட வுயிர், பிறப்பு இறப்புத் துன்பங்களையும் அத் துன்பங்களினின்றும் விடுபடுதற்குரிய சிவ வழிபாடும் அக் குருவால் கேட்டு மகிழ்ந்தது. மகிழவே ஐம்புல ஆசைகள் அகன்றன. அதனால் ஐம்புலக் கள்வர் பற்றிப் பிடித்துச் செய்யும் துன்பங்கட்கு அவ்வுயிர் கடமைப்படாது நீங்கிற்று. அதனால் அத்தகைய வுயிர் வெற்றிப்பாடமைந்த ஆனேற்றையுடைய அண்ணலாகிய சிவபெருமான் திருவடியைக்கூடும். தாவில் தவஞ்செய்யும் தலைமையினை ஆயும்; எய்தும்.

(அ. சி.) கேடும் - தீயவை இன்ன என்றும், கடமையும் - அறங்கள் இன்ன என்றும், கேட்டு - உபதேசவாயிலாகக் கேட்டு, உவந்து - இன்பம் எய்தி, ஐவரும் நாடி வளைந்தது - ஐம்புல ஆசையால் விளைந்த பயனுக்கு. நான் கடவேன் அலேன் - நான் உட்பட்டவன் அல்லன்.

(5)

1593. உழவன் உழவுழ வானம் வழங்க

உழவன் உழவினிற் [1]பூத்த குவளை

உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்டு

உழவன் அதனை யுழவொழிந் தானே.[2]

(ப. இ.) சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நன்னெறி நான்மைப் பயிற்சியாம் உழவாகிய தொண்டினைச் செய்ய வானம் ஆகிய திருவருள் வெளியிலுறையும் சிவபெருமான் அருளாகிய மழையைப் பொழிய, தொண்ட வுழவர் ஆரத்தந்த அவ் வுழவினிற் செவ்விநோக்கி மலரும் குவளையாகிய திருவடியுணர்வு சிவஞானம் பூத்தது. உழவனாகிய மெய்த்தொண்டன், தன்னை விட்டு நீங்காது தன்னுடைய அன்பறிவாற்றல்களுக்கு உடன் துணைசெய்யும் சிவபெருமானின் அன்பு அறிவாற்றல்கள் அத் திருவடி யுணர்வை அருள் நோக்கம் செய்து காத்தளிக்குமென்று அத் திருவருள் பொறுப்பில் ஒப்புவித்து ஒழுக, அவன் செய்யும் திருத்தொண்டும் அருள் தொண்டாய் நிகழ்ந்தது.

(அ. சி.) உழவன் - சரியையாதி நாற்பாதங்களில் பயிலும் பக்குவன். உழவு - பயிற்சி. வானம் - கருணை மழை. வேளை பூத்தது - வேளை ஒருவகைச் செடி. வேளை என்றால் காலத்துக்கும் ஒரு பெயர். பக்குவ காலத்தில் ஞானம் உண்டாயது என்பது பொருள். உழத்தியர் - அறிவு, இச்சை, செயல்கள்.

(6)

1594. மேல்துறந் தண்ணல் விளக்கொளி கூற்றுவன்

நாள்துறந் தார்க்கவன் நண்பன் அவாவிலி

கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்

பார்துறந் தார்க்கே பதஞ்செய லாமே.

---

1. (பாடம்) பூத்தது வேளை.

2. மெய்ம்மையான். " 4. 76 - 2.

" எய்யத், 11. நக்கீரர், ஈங்கோய்மலை எழுபது - 12.

" கானமர். 8. திருக்கோவையார், 274.

" துடியடியன. 12. கண்ணப்பர், 86.

" செய்யுஞ். திருக்களிற்றுப்படியார், 21.

(ப. இ.) தொன்மையிலேயே தொடக்கும் பற்றும் அறவே இல்லாத இயற்கை மயலில்லாத துறவி சிவபெருமான். அவன் மெய்யடியார்கட்கு ஆக்கமும் கேடும் இல்லாத அருட்பெரும் சோதி. அகத்தவமாகிய சிவயோகப் பயிற்சி முறையால் கூற்றுவனை வென்றவர்க்கு உற்ற தோழன்; அவா என்று சொல்லப்படும் பசைமலமும் இல்லாதவன். காரறிவாண்மையாகிய அறியாமையினின்று நீங்கிய ஆருயிர்க்குச் சிவன் கண்ணுதலாகிய உருவத் திருமேனி கொண்டருள்வன். உலகப்பற்று முற்றும் அற்றவர்க்குத் திருவடிப்பேறு எய்தும்.

(அ. சி.) மேல் துறந்த - இயற்கைத் துறவியாகிய. கூற்றுவன் நாள் துறந்தார்க்கு - யோகத்தால் எமனை வென்றவர்களுக்கு. கார் - அஞ்ஞானம். பார் - உலகப் பற்று.

(7)

1595. நாகமும் ஒன்று படம்ஐந்து நாலது

போகமுட் புற்றிற் பொருந்தி நிறைந்தது

ஆக மிரண்டும் படம்விரித் தாட்டொழிந்

தேகப் படஞ்செய் துடம்பிட மாமே.

(ப. இ.) ஆருயிர்கட்கு நாகம்போலும் உடம்பு ஒன்று. அதன் ஐந்து படம் போலும் ஐம்பொறிகள். அப் பொறிகள் வழியாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பயன்களையும் உயிர் நுகரும். உளப்புற்றாகிய உடம்பினது அகத்துப் பொருந்தி நிறைந்து நிற்பன் சிவன். நுண்மை முன்மையாகிய உடம்பு இரண்டினுள்ளும் படமாகிய பொறி வழிச் சென்று ஆடும் செயலறப் பாடஞ்செய்தலாகிய தகுதியுண்டாக்கி, அச் சிவபெருமான் அவ் வுடம்பினை இடமாகக் கொண்டருள்வன். நுண்மை - சூக்குமம். முன்மை - காரணம். படஞ்செய்து: பாடம் செய்து என்பதன் குறுக்கம்.

(அ. சி.) நாகம் - ஆன்மா. படமைந்து - ஐம்பொறிகள். நாலது போகம் - போகம் நான்கு: அறம், பொருள், இன்பம், வீடு. உட்புற்றில் சரீரத்தில். ஆகம் இரண்டு - சூக்குமம், காரணம். இரண்டு சரீரங்களிலும் - படம் விரித்தாட்டொழிந்து பொறிகளில் சென்று உழல்வதை ஒழிந்து. படம் செய்து பக்குவப்படுத்தி. உடம்பிடமாம் - உடம்பிலே நிலைத்திருக்கும்.

(8)

1596. அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்

இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்

சிவன்றாள் பலபல சீவனு மாகும்

நயன்றான் வரும்வழி நாமறி யோமே.

(ப. இ.) அம்மையுடன் கூடிய அப்பனாகிய சிவனும் பற்றற்றார் வழிக்கு முதல்வன் ஆவன். அவன் இன்ன தன்மையன் என்றிசைக்கும் எளியனும் அல்லன். சிவன் தாளாகிய திருவருள் ஆருயிர்கட்கு ஏற்றவாறு பலவாக அமைந்து செவ்வி வருவிக்கும். நயமாகிய திருவடியுணர்வு திருவருளுணர்வா லுணரத்தக்கது. நாம் என்னும் அகச் செருக்கு உள்ளவரையும் அவ் வுயிர் ஆணவ முனைப்புடையது. அம் முனைப்பால் சிவனை உணரமுடியாதென்பதுதான், நாமறியோம் என்பது.

(அ. சி.) அகன்றார் வழிமுதல் - துறவிகள் பரம்பரைக்கு முதல்வன். சிவன்றாள் - சிவசத்தி. வரும் வழி - அச் சத்தி வரும் வழி நாம் அறியோம் - 'நாம்' என்னும் மமகாரத்தைக் கொண்டு இருக்கிறவரை அறியோம்.

(9)

1597. தூம்பு திறந்தன ஒன்பது வாய்தலும்

ஆம்பற் குழலியின் கஞ்சுளிப் பட்டது

வேம்பேறி நோக்கினன் மீகாமன் கூரையிற்

கூம்பேறிக் கோயிலிற் பூக்கின்ற வாறே.[1]

(ப. இ.) உடம்பகத்துக் காணப்படும் வாயில்கள் இரண்டும் சாளரங்களாகிய ஏழும் கூடித் தொளைகள் ஒன்பது. அத் தொளைகள் ஒன்பதும் திறக்கப்பட்டன. ஆம்பற்பூச் சூடிய கூந்தலையுடைய திருவருளம்மை கஞ்சுகமாகிய சட்டைபோல் அவ் வுடம்பினைக் காப்பள். உயிர்ப்பு முறையால் வேம்பாகிய நடுநாடியின் வழிமேலேறி நோக்கினால், மீகாமனாகிய சிவபெருமான் கூரைக்கூம்பாகிய உச்சித்துளையில் திருக்கோவில் கொண்டருள்வன். அருளவே அருள் பூக்கின்ற முழுமுதற் சிவபெருமானின் விழுச்சுடர் வெளிப்படும். கூம்பு - பாய்மரம்.

(அ. சி.) தூம்பு - தொளை. ஆம்பல் குழலி - தேவி, சத்தி. கஞ்சுளி சட்டை வேம்பேறி - வூணாத்தண்டு ஏறி. மூகாமன் - சூவன். கூரையின் கூம்பு - முகட்டின் உச்சி. பூக்கின்ற - ஒளிவிடுகின்ற.

(10)

---

5. தவம்

1598. ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்

நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை[2]

இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை

படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே.

(ப. இ.) புலன்களை நிலைபெறவேண்டிய சிவபெருமான் திருவடியின்கண் ஒடுக்குவார் நன்மையே செய்வர். அதனால் அவர்கள் தலைசிறந்தவராவர். அவர்களுள்ளம் எஞ்ஞான்றும் நடுக்கம் உறாது. அவர்கள் தேனாரும் சிவவாழ்க்கை வாழ்வதால் அவர்கட்குப் பிறப்பு இறப்புத் துன்பம் எய்தா. அதனால் அவர்களுக்கு நமனும் இல்லை. வேறு எவ்வகை உலகியல் துன்பமும் இல்லை. சிவனின் நினைப்பு மறப்பாகிய பகல் இரவுகளில்லை. அடைதற்குரிய வழிப்பயன்களும் இல்லை. அவர்களே பற்றற்றான் பற்றினைப் பற்றி ஏனைப் பற்றுக்களை அறுத்தவராவர்.

(அ. சி.) ஒடுங்குநிலை - புலன்வழிச் செல்லா நிலை.

(1)

---

1. செஞ்ஞாயிற்றுச். புறநானூறு. 30.

2. நாமார்க்குங், அப்பர், 6. 98 - 1.

" வானைக். " 4. 93 - 4.

1599. எம்மா ருயிரும் இருநிலத் தோற்றமுஞ்

செம்மா தவத்தின் செயலின் பெருமையும்

அம்மான் திருவருள் பெற்றவ ரல்லால்

இம்மா தவத்தின் இயல்பறி யாரே.[1]

(ப. இ.) மலத்தேய்வின் பொருட்டு ஆருயிர்களை மாயாகாரியமாகிய உடலுடன் கூட்டுவதாகிய உயிர்த்தோற்றமும், அவ் வுயிருடன் கூடிய உடல் நிலைத்திருப்பதற்கு வேண்டிய உலகமும் உலகியற் பொருள்களுமாகிய பெருநிலத் தோற்றமும், திருவடியைச் சேர்தற் பொருட்டுச் செய்யப்படும் நன்னெறி நான்மைத் தவத்தின் பெருமையும்

சிவபெருமான் திருவருள் பெற்ற செந்நெறிச் செல்வர்களுக்கே தெரிய வரும். ஏனையார்க்குத் தெரியவாரா. இவ் வுண்மைகளை உள்ளவாறு உயர்வதும் ஒருபெரும் தவமாகும்.

(2)

1600. பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்[2]

சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்

மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்

பிறப்பினை நூக்கும் பெருமைபெற் றாரே.

(ப. இ.) உயிருய்யுமாறு உயிர்க்குயிராகிய உடையவனால் தரப்பட்ட உடலுக்கும் உழையாது பிச்சை எடுத்துண்ணும் பலர், பிறப்பு இறப்புக்களால் ஏற்படும் பெருந் துன்பத்தினை யறியார். சிவபெருமான் திருவடியை மறவாமையே பெருந்தவம். அப் பெருந்தவம் செய்தார், சிறப்பாகிய வீடுபேற்றுடன் வேண்டிய இம்மை மறுமைச் செல்வங்களும் பெறுவர். அவர்களே பிறப்பினையறுக்கும் சிவபுண்ணியப் பெருமை பெற்றவராவர். பிச்சை - தவவுணவு.

(அ. சி.) பிச்சைசெய் மாந்தர் - தவசிகள். மறப்பிலராகி - நினைப்பு மறப்பு இல்லாதவராகி.

(3)

1601. பள்ள முதுநீர் பழகிய மீனினம்

வெள்ளம் புதியவை காண விருப்புறும்

கள்ளவர் கோதையர் காமனோ டாடினும்

உள்ளம் பிரியா ஒருவனைக் காணுமே.[3]

(ப. இ.) மீனினங்கள் பள்ளத்தின் தங்கிக் கிடக்கும் பழைமையான தண்ணீரினை நுகர்ந்துகொண்டிருந்தாலும், புதுவெள்ளம் எப்பொழுது வரும் என்றே நினைந்துகொண்டிருக்கும். அதுபோல் ஆருயிர் அனைத்தும் ஆண்டவன் திருவடியைப் பேணுதலே நற்றவமாதலின் அம் முறையில் பெண் என்று அழைக்கப்படும். இது 'சிவத்தைப்பேணில் தவத்திற்கு அழகு' என்னும் கொன்றைவேந்தனால் (28) உணரலாம். ஆதலின் மணங்கமழ்கின்ற பூச்சூடிய இறைவனைப் பேணும் பெண்ணாகிய வுயிர், நிலையாப் பொருள்களை வினைக்கீடாக நுகர்ந்துகொண்டிருப்பினும்

---

1. சிவஞ்சத்திதன்னை. சிவஞானசித்தியார், 2. 4 - 5.

2. பூக்கைக். அப்பர், 5. 9 - 5.

" அச்சிவன். 10. திருமந்திரம், 8. 2 - 25, 1848.

3. சாக்கிரத்தே, நாடுகளிற். சிவஞானசித்தியார், 10. 2 - 3.

" நிலைப்பாடே. அப்பர், 6. 45 - 8.

சிவனை உள்ளம் தழுவுதலால் என்றும் பிரியா ஒருவனாம் சிவனைக் கண்டு கொண்டின்புறும்.

(அ. சி.) கள்....காணுமே - தவசிகள் உலக அனுபவங்களில் அழுந்தி நின்றாலும் உள்ளம் சிவனைவிட்டு அகலாது.

(4)

1602. கரந்துங் கரந்திலன்கண்ணுக்குந் தோன்றான்

பரந்த சடையன் பசும்பொன் நிறத்தன்.[1]

அருந்தவர்க் கல்லால் அணுகலு மாகான்

விரைந்து தொழப்படும் வெண்மதி யானே.

(ப. இ.) பற்றுடையவர்களுடன் பற்றற்ற சிவனும் விரவிப் பாலில் நெய்போல் மறைந்து நிற்கின்றனன். அங்ஙனம் நிற்பினும், பற்றற்ற மெய்யடியார்கட்கு வெளிப்பட்டுத் தோன்றியருள்வன். அவனே பொன் போலும் விரிந்த பின்னல் திருச்சடையினையுடையவன். அவன் பொன் போலும் மேனியன். திருவருள் துணையால் அருந்தவம் ஆற்றிய செந்தமிழ்ச் சிவனார்முன் விளங்கி நிற்பன். செந்தமிழ்ச் சிவனார் - மெய்யடியார். அத்தகு மெய்த்தவத்தோரே அச் சிவனாரின் இயற்கை உண்மை அறிவின்ப நிலையினை உணர்வர். ஆகையால் வாலறிவனாகிய வெண்மதியினைக் காலமுண்டாகவே காதல் செய்து உய்தலும், வேண்டினுண்டாகத் துறத்தலும்போன்று விரைந்து தொழுதல் வேண்டும்.

(5)

1603. அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்

பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே

அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி

இமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே.[1]

(ப. இ.) சூழ்ச்சிமிக்க அமைச்சரும், பெருமைமிக்க யானைக் கூட்டங்களும் ஆற்றல்மிக்க அரசரும் பகைத்தெழுந்து செய்த பெரும் போரில் இருதிறத்தாரும் எண்ணிறந்தாராய் மாண்டனர் அப் போர்நடுவே நின்று காண்பார்க்கு நிலையாமை உணர்ச்சியும், திருவடியுணர்வும், சிவப்பேற்றின்கண் ஆத்தமாகிய நேயமும் இயல்பாக வுண்டாகும். அந் நோக்கல் நோக்காகிய கருத்தினை மறந்து அழியாதிருந்தார் இறவாத நற்றவம் செய்தோராவர்.

(அ. சி.) இம் மந்திரம் பெரிய வல்லரசுகளும் பகைத்தெழுந்து, சண்டையுட்பட்டு, மாண்டு ஒழிவதைக் கண்டு அச் சமயத்தில் ஏற்படும் ஞானத்தால் அறிவுடையோர் தவத்தை மேற்கொள்வர் என்றது. அத்தம் என்பது ஆத்தம் என்று ஆயிற்று. அத்தம் - சமயம்.

(6)

1604. சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்

மாத்திரைப் போது [2]மறித்துள்ளே நோக்குமின்

பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்

ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே.

---

1. செம்பொ. அப்பர், 5. 32 - 5.

" விழித்தகண். திருக்குறள், 775.

2. சாத்திரம் பல. அப்பர், 5. 60 - 3.

" ஆர்த்தபிறவித், 8. திருவெம்பாவை, 12.

(ப. இ.) உண்மை நாட்டமின்றிப் பொருள் கருதி நூல்களைப் படித்துப் பிதற்றித் திரியும் பொய்ப் பெருமைகளை விட்டகன்று நீங்கள் மாத்திரையாகிய ஒரு நொடிப்பொழுதேனும் உயிர் உணர்வு வெளிமுகப்படாது. அகமுகப்பட்டுச் சிவனை அவனருளால் நோக்குங்கள். அங்ஙனம் நோக்கினால், அப் பார்வையுணர்வு பசுமரத்தாணிபோல் உயிரின்கண் பதிந்து விளங்கும். அவ் விளக்கத்தால் தொன்றுதொட்டுப் பிணித்துவரும் பிறவி நீங்கியோடும்.

(அ. சி.) சதுர் - பெருமை. மாத்திரைப்போது - இமைகொட்டும் நேரம். மறித்து - வெளிமுகமாய் இருக்கும் அறிவைத் தடுத்து. ஆர்த்த - பந்தித்த.

(7)

1605. தவம்வேண்டு ஞானந் தலைபட வேண்டில்

தவம்வேண்டா ஞான சமாதிகை கூடில்

தவம்வேண்டா மச்ச கசமார்க்கத் தோர்க்குத்

தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே.[1]

(ப. இ.) ஒருவர்க்குத் திருவடியுணர்வு வேண்டப்படுமானால் அதற்குச் சூலம் நோன்புகளாகிய புறத்தவப் பயிற்சிகள் இடையறாது வேண்டப்படும். ஞான சமாதியாகிய திருவடியுணர்வில் நிலைத்து நிற்போருக்கு முற்ற முடிந்த மேல்வகுப்புக்குச் செல்வார் நிலைபோன்று வேறு தவங்கள் வேண்டப்படுவன அல்ல. அதுபோலவே செறிவு அறிவு ஆகிய

இருநிலையின நிற்பார் முறையே அகத்தவமும் அறிவுத்தவமும் உடையராவர். அவர்கட்கும் ஏனைத்தவங்கள் வேண்டா. பிறர் இப்பொருள் மொழியுண்மையினை யறியார்.

(அ. சி.) சகசன்மார்க்கத்தோர்க்கு - சகமார்க்கத்தோர்; சன்மார்க்கத்தோர்; அஃதாவது யோகஞான நெறியில் நிற்பவர். மாற்றம் - தடுமாற்றம்.

(8)

---

6. தவநிந்தை

(தவக்கடப்பு)

1606. ஓதலும் வேண்டாம்[2] உயிர்க்குயி ருள்ளுற்றாற்

காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்

சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்

போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே.

---

1. பசித்துண்டு. சிவஞானபோதம், 8. 1 - 2.

" நாடுகளிற், சிவஞானசித்தியார், 10. 2 - 3.

" தருமந். அப்பர், 5. 97 - 21.

2. உற்றாரை. 8. திருப்புலம்பல், 3.

" கண்கள். " திருப்படையாட்சி, 1.

" செம்மை. 12. சண்டேசர், 2.

(ப. இ.) உயிருக்கு உயிராகிய சிவபெருமான் அவ் வுயிரினிடமாக வெளிப்பட்டு விளங்கினால், பாடம் கைவரப்பெற்றோர்க்கு அப் பாடம் மீண்டும் படிக்க வேண்டாமை போலச் சிவனை அடைதற்காக ஓதும் ஓதல் முயற்சிகள் வேண்டாம் என்பதே ஓதுதலும் வேண்டாம் என்பது. மெய்யாகிய உடம்பின்கண் சிவபெருமான் உள்ளம் பெருங்கோவிலாகக் கொள்வோனாதலின் அதனைக் கோவிலாகக் கொண்டருளின பின்பு அதன்பொருட்டுச் செய்த தனிப்பெருங் காதலாகிய பத்தி முயற்சியும் வேண்டாம். இஃது அடிப்படை போட்டுக் கட்டிய வளமனையாகிய வீட்டிற்குப் பின் அடிப்படை முயற்சி வேண்டாமையை ஒக்கும். வேண்டாமை என்பது குறிப்பாக முற்றுப்பெற்றமையைப் புலப்படுத்தும். தான் அவனாதல் என்னும் சமாதி கைகூடினால் அழுந்தும் முயற்சியாகிய சாதலும் வேண்டாம். திருவருள் வலத்தால் தம்மை ஐந்துபுலனும் பின்செல்லும்படியாக ஒழுகும் ஒழுக்கத்தினார்க்கு இடம்பெயர்ந்து தவத்திற்குச் செல்லும் முயற்சிகள் வேண்டா.

(அ. சி.) உயிர்க்குயிர் - சிவன். மெய்க்காயமிடங் கண்டால் - உடம்பினுள் உத்தமன் கோவில்கொண்டால். போதல் - தவமியற்ற வனம் முதலிய இடங்களுக்குப் போதல்.

(1)

1607. கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற்

சத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்

சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றலாற்

சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே.

(ப. இ.) மெய்ந்நூற் பொருள்களின் உண்மைக் கருத்தறிந்து அடங்கினால், வெளிப்படையாக அச் சொற்றொடர்களை எடுத்தும் படுத்தும் கத்துதலாகிய முயற்சிகள் வேண்டா. சமாதி கைகூடினால் வேதம் ஓதுதலாகிய சத்தமும் வேண்டா. ஆணவத் தொடக்கற்றவர்க்கு வேறு துப்புரவுகள் வேண்டா. உயிர்ச் செயலற்று உடையான் செயலாக இருப்பின் ஒன்றைத் தூக்கி நாடுதலாகிய சித்தமும் வேண்டா.

(அ. சி.) கருத்தறிந்து - உண்மைப் பொருளை அறிந்து. ஆறினால் - அடங்கினால். சத்தமும் - மந்திர உச்சாடனமும் ஆரவார பூசையும். தொடக்கு - பற்று.

(2)

1608. விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்

விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்

விளைவறி வார்பண்டை மெய்யறஞ் செய்வார்

விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே.

(ப. இ.) உடம்பெடுத்தபயன் உடம்பினுள் உடையானைக் கண்டு வழிபடுதல். இவ் வுண்மையினை யுணர்ந்தார் நன்னெறி நான்மைத்தவம் புரிவராவர். அதுபோல் மெய்யுரையாகிய குருமொழிகொள்வார் உடம்பின் பயன் உணர்ந்தோராவர். மெய்யறமாகிய சிவபுண்ணியஞ் செய்வாரும் உண்மை உணர்ந்தோரே. இவ் வுண்மையுணர்ந்தோர் விண்ணிலும் மண்ணிலும் வாழ்வார் அனைவரினும் மிக்கோராவர்.

(அ. சி.) விளைவு - உடம்பினால் ஆம் பயன்.

(3)

1609. கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்

தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி

**வாடித் தவஞ்செய்வ தேதவம் இவைகளைந்

தூடிற் பலவுல கோரெத் தவரே.[1]

(ப. இ.) திருவருளோடு கூடிச் சிவத்தைப் பேணுவதாகிய தவத்தைச் செய்து அவன் திருவடியைக் கண்டுகொண்டேன். அத் தவ வழியே சென்று சிவ நிலையையும் கண்டேன். முன்னாக அவ் வுண்மை உணர்ந்தவர் உடல் வருந்தும்படியாகத் தவஞ்செய்யார். ஐம்புலன்களையும் வென்றவர் பலவுலகப் பண்பினராவர். வெல்லாது ஊடி நிற்பவர் ஒரு தவமும் உடையவராகார்.

(அ. சி.) கூடி - மனம் ஒருமைப்பட்டு. வாடி - உடலை விரதங்களால் வாட்டி. இவை களைந்து ஊடில் - இவ்வாறு தவம் செய்வதை விட்டு மாறுபடில். உலகோர் எத் தவரே - உலகினர் எவ்வகைத் தவமும் உடையராகார்.

(4)

1610. மனத்துறை மாகடல் ஏழுங்கை நூத்தித்

தவத்திடை யாளர்தஞ் சார்வத்து வந்தார்

பவத்திடை யாளர் அவர்பணி கேட்கின்

முகத்திடை நந்தியை முந்தலு மாமே.

(ப. இ.) மனத்துக்கு மேலுள்ள இறுப்புமெய் யென்னும் புத்தி தத்துவத்தின்கண் தங்கிக் கிடக்கின்ற கடல்போலும் எல்லையில்லாத எழுவகைப் பிறப்பிற்குங் காரணமாகிய எஞ்சுவினைகளைச் சிவகுருவின் வழித் திருவைந்தெழுத்துக் கணிக்குமுறையில் நூந்தி நற்றவஞ்செய்யும் நல்லாராகிய சிவஞானிகளுடன் இணங்கி அவர்வழி நிற்பார்க்குப் பிறப்பில்லை. அதனால் அவர் பிறப்பினை எய்தார். அந் நல்லார்தம் பணியினைக் கேட்டுத் தொண்டு புரியின், நந்தியாகிய சிவபெருமானை நேராகக் கண்டு அவன் தாளிணைக்கு முந்துதலுமாகும். முகம் - நேர்.

(அ. சி.) மனத்துறை - மனத்தின் பகுதியாகிய நெஞ்சத்திடத்தே பதிந்துள்ள. மாகடல் ஏழுங் கைநூந்தி - சமுத்திரம்போலும் எழுவகைப் பிறவிகளுக்கும் காரணமான விதைகளை நூக்கி. சார்வத்து - கூட்டத்தில். பவத்திடையாகார் - பிறவியில் சேரார். முகத்திடை - நேராக.

(5)

1611. மனத்திடை நின்ற மதிவாள் உருவி

இனத்திடை நூக்கி இரண்டற வீர்த்துப்

புனத்திடை அஞ்சும்போ காமல் மறித்தால்

தவத்திடை யாறொளி தன்னொளி யாமே.

(ப. இ.) மனமாகிய உறையினின்றும் மதியாகிய வாளினை (சிவய நம) எடுத்துச் செருக்குச் சினம் சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணா வுவகை ஆகிய ஆறு கோடி மாயா சத்திகளென்னும்

1. நமச்சி. அப்பர், 5. 97 - 22.

" தவஞ் செய்வார். திருக்குறள், 266.

" தேடிக். அப்பர், 4. 9 - 12.

பகைவர்களை வென்று நூக்கி உயிரையும் உடையானையும் நான் அவன் என்று இரண்டாக வேறுபட எண்ணாமல், அவ் வெண்ணத்தை அவ்வாளினால் ஈர்த்து, உலகமாகிய விளைநிலத்தில் மெய், வாய், கண், மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளையும் புகவொட்டாமல், சிவனடிப்பேறாகிய வானோர்க்கும் உயர்ந்த மேனிலத்தில் போமாறு செலுத்தினால் நால்வகைத் தவத்தினும் முடிந்த தவமாகிய அறிவில் அறிவாகிய தவத்தால் பெறப்படும் சிவவொளியின்கண் தன்ஒளி அடங்கி ஆவியும் தன் ஒளியைக் கண்டு இன்புறும். அறிவுள் அறிவு - ஞானத்தில் ஞானம்.

(அ. சி.) மதிவாள் - அறிவாகிய வாள். இனத்திடை நூக்கி - காமம் முதலிய பகைவர் அறுவரினின்றும் விலக்கி. இரண்டற ஈர்த்து - தான், நான் (சிவன் - சீவன்) என்ற பாவனை ஒழிந்து சிவோகம் பாவனை செய்து. புன.....மறித்தால் - ஐம்பொறிகளும் புலன்களின் வழிச் செல்லாமல் தடுத்தால். தவ.....யாமே - தவத்தினால் பெறும் ஒளியாகிய சீவ ஒளியைப் பெறலாகும்.

(6)

1612. ஒத்து மிகவுநின் றானை யுரைப்பது

பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ

முத்தி கொடுக்கும் முனிவ னெனும்பதஞ்

சத்தான செய்வது தான்தவந் தானே.

(ப. இ.) சிவன் ஆருயிர்களுடன் வேறறக் கலந்து நின்று எஞ்ஞான்றும் இயங்கி அருள்கின்றனன். அவன் திருப்பெயராகிய 'சிவய நம' என்னும் திருவைந்தெழுத்தைப் பொருளுணரப் புகழ்ந்து ஓதுவதும், பத்தியினை முறுகுவிக்கும் மெய்யடியார்களைப் பணிந்து தொழுவதும் செய்யும் பெற்றியர்க்கும் வீடுபேற்றினை அளித்தருளும் சிவபெருமானாகிய முனிவரன் வெளிப்பட்டருள்வன். மேலும் தன் திருவடிப்பேறென்னும் சிவமெய்யினைத் தந்தருள்வன். அதுவே நற்றவத்தின் பயனாம்.

(அ. சி.) ஒத்து - சீவனோடு ஒத்து. உரைப்பது - துதிப்பது. முத்தி....தவந்தானே - முத்தியைப் பயக்கும் நன்மை தீமைகளை முனிந்த நிலையாகிய சிவத்தன்மையகைக் கொடுப்பதும் தவமே.

(7)

1613. இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி

மலர்தொட்டுக் கொண்டேன் வரும்புனல் காணேன்

தலைதொட்ட நூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளந்

தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே.[1]

(ப. இ.) சிலர் புறப்பூசையினை அயன்மொழியால் ஆற்றுகின்றனர். அவர்கள் உடல், செயல் செய்தாலும் உள்ளம் மொழிப் பொருள் தெரியாமையால் அதன்கண் தங்குவதில்லை. அதனால் செய்யுங்கால் சிவனுக்கு எண்ணி இலையிட்டும் பூச்சாத்தியும் வழிபட்டுக் கொண்டு வந்தாலும் கண்களில் இன்பநீர் பெருகக் காண்கிலம். திருமறையும் திருமுறையும் ஆகிய செந்தமிழ் வேத ஆகமங்களைத் தலைசிறந்த மெய்ந்நூலாகக்கொண்டு திருவைந்தெழுத்தை மந்திரமாகவும் திருப்பாடல்களை வழிபாட்டிற் செய்யும் செய்திறன் விளக்கும் தந்திரமாகவும்

---

1. அந்தண். சம்பந்தர், 1. 28 - 11.

" யாவர்க்கு. 10. திருமந்திரம், 109.

கொண்டு பொருளுணர்ந்து வழிபட்டால் வழிபடுவார் உள்ளம் அதன்கண் தங்கும். அதனால் இன்பக்கண்ணீர் பெருகும். அம்முறையில் அத் தமிழ் நூல்களின்வழி வழிபாடு செய்து கண்ணீரையும் கண்டேன். அதுவே நற்றவம் எனவும் கொண்டேன். எண்ணுதிரு ஐந்தெழுத்தே யாவுக்கும் மந்திரமாம், பண்ணுசெயல் தந்திரமாம் பாட்டு மந்திரம் - மறை. தந்திரம் - முறை. மேலும் வரும் வெண்பாவாலும் அது வலியுறும்:

"வேண்டுமருந் துண்டார்பால் மெய்நோய்கள் நீங்குமால்

நீண்டகண் கேள்வியால் நீங்காவாம் - பூண்டமொழிச்

சொற்பொருள்கள் ஓர்ந்தார்பால் தோயுமால் தோயாவாம்

பற்பலர்பால் அன்பின்பப் பண்பு."

(அ. சி.) இலைதொட்டு - பத்திரங்கிள்ளி (சிவபூசைக்குரிய செயல்). வரும் புனல் கண்டேன் - கண்களில் ஆனந்த நீர் வரக்கண்டேன். தலை தொட்ட நூல் - ஞான நூல். தாழ்ந்தது - அடங்கிற்று. தலைதொட்டு - அதுமுதல்.

(8)

1614. படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்கு

இடரடை யாவண்ணம் ஈசன் அருளும்

இடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கில்

உடரடை செய்வ தொருமனத் தாமே.

(ப. இ.) படர்ந்த சடையினையுடையராய் முழுமுதற் சிவனையே வேண்டிப் புரியும் அழிவில்லாத பெருந்தவம் இன்பமெனக் கொண்டு இடையறாது செய்த உண்மைப் பத்தர்கட்குப் பிறப்பு முதலிய துன்பங்கள் ஏதும் அணுகாவண்ணம் சிவபெருமான் காத்து அருளிச் செய்வன். இன்னாமை இன்பம் எனக்கொண்டு ஒழுகுவார் தவமும் மெய்த்தவமாகும். அத் தவத்தினை நோக்கில் உடம்பு அடையாமல் தடுப்பதற்கு வழி ஒருமனப்பட்டுச் சிவனை இடையறாது நினைவதேயாம்.

(அ. சி.) பத்திய பத்தர் - அருளுடைமை முதலிய பதின்மூன்று (1589) துறவு அறங்களைக் கைக்கொண்ட தவத்தர். இடர் அடை செய்தவர் - துன்பத்தை இன்பமாகக் கருதுபவர். உடர் அடை செய்வது - உடர் - உடல்; (ரகரம் போலி) பிறவியைத் தடுப்பது. ஒருமனம் - ஒருமைப்பட்ட மனம்.

(9)

1615. ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்
ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்
நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே.[1]

(ப. இ.) திருமறை, திருமுறைகளாகிய செந்தமிழ் அருள் நூல்களை - வேதாகமங்களை அருட்கண்கொண்டு கற்றுணராதார் நோன்பிருந்து தவம் செய்யமாட்டார். தவத்திற்கு அஞ்சிப் பிறப்பு இறப்பின் பெருந் துன்பத்திற்கு அஞ்சாது பிறந்து சோற்றுக்கு நின்று அலைகின்றவர்களுடைய நிலை, ஆற்றிற் கிடக்கின்ற முதலைத் துன்பத்திற்கு அஞ்சிக்

---

1. ஆற்றோடு. பட்டினத்துப்பிள் ளையார், திருத்தில்லை - 19.

காட்டில் வாழும்ஈன்றணிய குட்டிகளையுடைய கரடியின் வாயில்பட்ட முறையையொக்கும்.

(அ. சி.) ஈற்றுக்கரடி - குட்டிபோட்ட கரடி ஈன்ற என்பது விரிந்து வந்தது; குட்டிகளுடன் உள்ள கரடி மிகக் கொடுமையானதாய் இருக்கும்.

(10)

1616. பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்
குழக்கன்று துள்ளியக் கோணியைப் பல்காற்
குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்
இழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே.

(ப. இ.) நற்றவம் முதிர்ச்சியடையுமாறும், அத் தவத்தின் பயனை நுகருமாறும், இளங்கன்றொத்துத் துள்ளித் திரிகின்ற நெஞ்சினைப் பலமுறை அடக்கும் வன்மையுடையார் இனிமேற் கோணியாகிய உடம்பினுள் புகுந்தன்மையையும்

உணரவல்லாராவர். அவர்க்கு மெய்ம்மை தோன்றும். இளங்கன்றாகிய பசுவின்மனத்தை யடக்கவல்லார்க்கு நெஞ்சத்திடம் உண்டாகும்; பிறப்பும் நேராது.

(அ. சி.) பழுக்கின்றவாறும் - தவத்தின் முதிர்ச்சியடையும் விதமும். பழம் - தவத்தின் பயன். குழக்கன்று - பிராணவாயு. கோணி - சரீரம். கொட்டில் - புருவமத்தி. இழுக்காது - தவறாது. நெஞ்சத்திட - ஈசனை நெஞ்சில் இருத்த. ஒன்றும் - கூடும்.

(11)

1617. சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்

சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால்

சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்

சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே.[1]

(ப. இ.) இடையறாது செந்தமிழ்த் திருமறையாம் 'சிவசிவ' என்னும் தனிப்பெரு மந்திரத்தை ஓதிக்கொண்டு வருவார் நெஞ்சம் சிவனுறையும் இயற்கைத் திருக்கோவிலாகும். அவ்வாறு செய்பவர் வேறு எத்தவமும் செய்யவேண்டுவதின்று. அத்தகையோர் சித்தமாகிய நெஞ்சத்திடத்துச் சிவனடிப் பேரின்பமே நிலைபெறும். அதனால் அவர் வலிந்து ஆட்கொள்ளப்படும் சிவமாகிய தேவராவர். அவருடைய நல்லுறவும் வாய்க்கும். சித்தம் சிவமாம் பெருவாழ்வும் எய்தும். அஃது எய்தவே சித்திமுத்தி என்று சொல்லப்படும் அன்பியல் வாழ்க்கை, அருளியல் வாழ்க்கை, இன்பியல் வாழ்க்கை மூன்றும் எய்தும். சித்தம் சிவமாதலே செய்தவப்பேறு. இதுவே தாடலைபோற்றாமும் தவமார் தனிப்பெருங், கூடலை வாழ்வாகுமாற்கூறு. கூடல் + ஐ = தலைவன் வந்து கூடல்.

(அ. சி.) செய்தவம் வேண்டாவாம் - செய்த அவம் வேண்டாவாம் எனப் பிரிக்க. மறச் செயல்களை நூக்கவேண்டும். உறவுண்டால் - சிவ ஞானிகள் இணக்கம் இருந்தால்.

(12)

---

1. வந்துமிகைசெய். 12. சண்டேசர், 59.

" அவாவினை. திருக்குறள், 368.

" முத்தணி. 8. திருப்பொற் சுண்ணம், 10.

" புத்தன். " திருத்தோணோக்கம், 6.

7. அருளுடைமையின் ஞானம் வருதல்

1618. பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்

பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்

பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு

பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே.[1]

(ப. இ.) சிவபெருமானின் திருவருள் உண்டானால் செல்வன் கழலேத்தும் செல்வம் உண்டாகும். அதுபோல் திருவடியுணர்வும் உண்டாகும். அத் திருவருளால் அறிவினுள் அறிவாம் பேராப் பெருநிலையும் உண்டாகும். அதுபோல் சிவமாம் பெருவாழ்வும் எய்தும்.

(1)

1619. தமிழ்மண் டலம்ஐந்துந் தாவிய ஞானம்

உமிழ்வது போல உலகந் திரிவார்

அவிழு மனமும்எம் ஆதி யறிவுந்

தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ மாமே.[2]

(ப. இ.) 'சிவயசிவ' என்னும் தமிழ் மண்டலம் ஐந்தினும் பரவி நிற்கும் அறிவு, அருள், அடிமை, இன்பு, அன்பு என்னும் ஐந்தினையும் சித்தாந்த சைவராகிய சித்தர்கள் உலகம் எங்கணும் வலியச் சென்று செவ்விவாய்ந்தார்க்கு அறிவுறுத்துவர். அத்தகைய நல்லோர் மலர்ந்த மனமும், திருவடியுணர்வும் மேலோதிய தமிழ் மண்டலம் ஐந்தும் தமிழகத் தொன்மைச் செம்பொருட் டுணிவின் மாறா மெய்ம்மையாம் என்க.

(அ. சி.) தமிழ்....திரிவார் - மண்டலம் ஐந்தும் தமிழ் தாவிய ஞானத்தை உமிழ்வதுபோல உலகந்திரிவார் என வாசிக்க. தமிழ் தாவிய ஞானம் - தமிழ் வேதாகமங்களில் கூறப்பட்ட ஞானம். மண்டலம் ஐந்து - மண் தலம் ஐந்து; அஃதாவது பூமி அண்டத்திலுள்ள ஐந்து கண்டங்களும். உமிழ்வதுபோல உலகந்திரிவர் - சித்தர்கள் ஐந்து கண்டங்களிலும் சஞ்சரித்துத் தமிழ்த் தத்துவ அறிவைப் பக்குவர்களுக்கு உபதேசிப்பார். அவிழுமணம் - அன்பால் உருகிய மனம். திருமூலர் காலம் B. C. 6000 முதல் B. C. 100; ஆனதால், அக் காலத்தில் தமிழர்கள் ஐந்து கண்டங்களிலும் குடி ஏறி இருந்தார்கள். ஆண்டு எல்லாம் தமிழ் மொழியும், சைவ சமயமும் சிவலிங்க வழிபாடும் பரவி இருந்தன. இஃது அவ்வக் கண்டங்களில் இப்போது அகப்படும். சிவலிங்கங்களாலும் கல்வெட்டுகளாலும் தமிழ்த் திரிபான மொழியைப் பேசும் மனிதர்கள் அவ்வக் கண்டங்களில் வசித்தலாலும் உறுதி பெறுகின்றது.

(2)

1620. புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்

நண்ணும் பொழுதறி வார்சிவ ஞானிகள்

எண்ணி இரண்டையும் வேரறுத் தப்புறத்து

அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வீரே.[3]

---

1. நில்லாத. 12. திருநாவுக்கரசர், 37.

2. மொய்வைத்த 12. மூர்த்தி நாயனார். 3.

3. புண்ணியமேல், சிவஞானசித்தியார், 8. 2 - 21.

" இருள்சேர். திருக்குறள், 5.

(ப. இ.) திருவடியுணர்வு மறவா நல்லோராகிய சிவஞானிகள் நிலவுலகில் தோன்றும்பொழுது புண்ணிய பாவமாகிய இருவினைகளையும் அறிவர். அத்தகைய நல்லோர் நற்றுணையால் பிறப்புக்கு வித்தா புண்ணிய பாவ மிரண்டனையும் வேரறுத்து, முப்பத்தாறு மெய்யும் கடந்து அப்பாலுள்ள அருள்வெளியே செப்பமுற விளங்கும் அண்ணலாகிய சிவபெருமான் இடம். அதுவே நாம் அடைய வேண்டிய நல்லிடம் என்று உணர்ந்துகொள்வீர்.

(அ. சி.) இம் மந்திரம் புண்ணியத்தையும் பாவத்தையும் இரண்டையும் ஒழிக்கவேண்டு மென்றது. அஃதாவது இரண்டிலும் பற்றற இருக்கும் நிலை.

(3)

1621. முன்னின் றருளு முடிகின்ற காலத்து

நன்னின் றுலகில் நடுவுயி ராய்நிற்கும்

பின்னின் றருளும் பிறவியை நூக்கிடும்

முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே.

(ப. இ.) நற்றவம் நிறைவுறுங் காலத்துச் சிவபெருமான் எதிர் தோன்றி அருள்புரிவன். நன்மை நிறைந்த இவ் வுலகத்தில் அனைத்துயிர்க்கும் தினைத்துணையும் வேற்றுமையின்றிச் சிவன் நடுவாய் நின்றருள்வன். நடுவாய் - பொதுவாய் நிற்றல்; என்பது உயிர்க்குயிராய் நிற்றலெனினுமாம். எஞ்சுவினைக்கூடாக வரக்கடவ பிறவிகளைப் பின் நின்று நூக்கியருள்வன். பின்னின்று: பின்னி நின்று; புணர்ந்து நின்று நினைப்பின் வீற்றிருந்தருள்வன். அதனால் அடியேன்

அவனையே நினைப்பேன். அதனால் அவன் வீடுபேற்றையும் தந்தருள்வன். முன் - நினைப்பு பின்னி என்பது பின் எனக் கடைக் குறைந்தது.

(அ. சி.) முன்னின்று அருளும் - எதிர்தோன்றி அருளுவன். முடிகின்ற காலத்து - தவம் முற்றுப்பெற்ற காலத்து. நன்னின்று......நிற்கும் நன்மார்க்கத்தில் நிற்கும் உயிர்களுக்கு அவ் வுயிர்களின் ஊடே சிவன் சிறந்து விளங்குவான்.

(4)

1622. சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்

சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்

சிவனரு ளால்வினை சேரகி லாமை

சிவனருள் கூடின்அச் சிவலோக மாமே.

(ப. இ.) சிவபெருமான் திருவருளால் உடல்மெய்யாகிய இருபத்து நான்களுள் தங்கிப் படைத்தல், காத்தல், துடைத்தல், விண்ணாடு புரத்தல் முதலிய இறைமைத் தொழில்களை ஆருயிர்கள் சிவனாராணையால் புரியும். அப்பொழுது அவ் வுயிர்கள் தேவர்கள் எனப்படும். இத் தேவர்களையும் இயக்கும் அருள்பெற்ற வுயிர்கள் உணர்த்துமெய்யாகிய முப்பத்திரண்டாம் மெய்யின்கண் தங்கி அயன், அரி, அரன், வேந்தன் என்னும் பெயர்களையே பூண்டு நிற்கும். முப்பத்திரண்டாம் மெய் ஆசான் மெய் அல்லது சுத்தவித்தை எனப்படும். மெய் - தத்துவம். இவர்களும் தேவர்கள் என அழைக்கப்பெறுவர். இந் நிலவுலகத்துச் சிவனருளால் வாழ்வாங்கு வாழும் வாய்மையர்களும் தேவர் எனப் பெறுவர் சிவபெருமான் திருவருளால் எஞ்சுவினை, ஏன்றவினை, ஏறு வினை என்னும் முத்திற வினைகளும் சேரமாட்டா. சிவபெருமான் திருவடிகூடப்பெற்றால் சிவவுலக வாழ்வு சேர்வதுறுதி..

(அ. சி.) தேவர் - செவ்வாய், சுக்கிரன், புதன், வியாழன் கோள்களில் வசிப்பவர்கள் தேவர் எனப்படுவர். பூமியில் வசிப்பவர் மானிடர் எனப்படுவர். சந்திரன் முதலிய உபகோள்களில் வசிப்பவர் பிதிர்க்கள் எனப்படுவர். தெய்வத்தோடு ஒப்பர் - மானிடரே ஆயினும் தேவர் தன்மை பெற்று இருப்பவர்.

(5)

1623. புண்ணியன் எந்தை புனிதன் இணையடி

நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது

மண்ணவ ராவதும் வானவ ராவதும்

அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே.[1]

(ப. இ.) அம்மையும் அப்பனுமாக ஓருடம்பில் விளங்கும் சிவபெருமான் புண்ணியன் என்று அழைக்கப்படுவான். யாவர்க்கும் தந்தையாயுள்ளானாதலின் அவன் எந்தை எனப்படுவான். அவனே யாவரையும் தூய்மைப்படுத்தலால் அவன்

புனிதமாயுள்ளான். நல்லார் அத்தகையோன் திருவடியைத் திருவைந்தெழுத்தோதிச் சேர்வர். அப்படிச் சேர்தலால் அவர்பால் திருவிளக்குச் சுடராகிய சிவஞானம் விளைந்தது. தலைமைப்பாடமைந்த சிவபெருமான் திருவருள் பெற்றபோதே மண்ணவர் பிறப்பற்றுச் சிறப்புறுவதும் சிவவுலகத்தவராகிய வானவராவதும் நிகழும்.

(அ. சி.) விளக்கென - விளக்கின் ஒளிபோல.

(6)

1624. காயத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட

மாயத்தே ரேறி மயங்கு மவையுணர்

நேயத்தே ரேறி நிமலன் அருள்பெற்றால்

ஆயத்தே ரேறி யவனிவ னாமே.

(ப. இ.) உடம்பாகிய தேரினுட் புகுந்து, மனமாகிய தேரோட்டி சேர்த்துவைக்க. மாயத் தேராகிய இவ் வுலகத்தில் மயங்கும் உயிரினங்கள் திருவடியன்பாகிய தேரேறிச் சிவபெருமான் திருவருளைப் பெற்றால் ஆயமாகிய சிவனடியார் திருக்கூட்டத்துடன் விரவி உயர்வற உயர்ந்த சிவமாம் பெருவாழ்வை எய்தும்.

(அ. சி.) காயத்தேர் - உடம்பு. மனப்பாகன் கைகூட்ட மனத்தோடு கூடி மாயத்தேர் - உலக வாழ்க்கை. நேயத்தேர் - நியமம் நேயம் என வந்தது. இமயம் நியமம் முதலிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு. ஆயத்தேர் - சமாதி யோகம்.

(7)

1625. கதிர்கண்ட காந்தங் கனலின் வடிவாம்

மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாஞ்

சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்

எரிகொண்ட ஈசன் எழில்வடி வாமே.[2]**

---

1. வேதநாயகன். அப்பர், 5. 100 - 1.

2. சூரியகாந். சிவஞானசித்தியார், 8 2 - 18.

(ப. இ.) ஞாயிற்றின் கதிர்கண்டு அக் கதிரொளியை ஏற்று வெளிப்படுத்தங் கல் (சூரியகாந்தக் கல்) கதிர்க் கல் எனவும், திங்களின் கதிரையேற்றுக் குளிர்நீரை வெளிப்படுத்துங் கல் (சந்திரகாந்தக் கல்) நிலாக் கல் எனவும், தீயினைக் காண அதன் கதிரை வெளிப்படுத்தங் கல் தீக் கல் எனவும் வழங்கப்பெறும். இக் கல்லைச் சக்கிமுக்கிக் கல் என்பர். கதிர் கண்டவுடன் கதிர்க்கல் கனலைக் கக்கும். மதி கண்டவுடன் நிலாக் கல் குளிர்ச்சியைக் கக்கும். தீத்தட்டுங் கருவியாகிய சதியினைக் கொண்ட சக்கி - சாக்கி என்னும் தீக்கல் தீயினைக் கக்கும். மழுவாகிய

தூயினை இடத்திருக்கையில் கொண்டருளிய சிவபெருமானை அருள் துணையால் அவன் இயற்கை எழில் வடிவில் காணலாம். அக் காட்சியான் ஆருயிர்கள் அனைத்தும் சிவனாம் நிலையினை எய்தும். கக்குதல் - காலுதல்.

(அ. சி.) மணி - முத்து. சதி - தூத்தட்டுங் கருவி; முக்கி. சாக்கி - சக்கி என்பதன் நீட்டல்; தூத்தட்டுங் கல், இவை இரண்டினையும், "சக்கி முக்கி" என்பதன் உலக வழக்கு.

(8)

1626. நாடும் உறவுங் கலந்தெங்கள் நந்தியைத்

தேடுவன் தேடிச் சிவபெரு மான்என்று

கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல்ல

வீடு மளவும் விடுகின் றிலேனே.[1]

(ப. இ.) நாடுதலாகிய சிந்தித்தலும், உறவாகிய முழுநேயமுங் கொண்டு எங்கள் நந்தியாகிய சிவபெருமானை அவன் அருள்விளக்கத் துணையால் தேடுவேன். தேடிச் சிவபெருமானென்று கூடுவேன். கூடி இடையறாது நினைக்கும் நினைவாகிய ஒலிக்கும் ஆண்மைக் கழலணிந்துள்ள திருவடிக்கே செல உடம்பைவிட்டு உயிர் நீங்கும்வரைத் திருவடியைப் பற்றுதலாகிய திருவைந்தெழுத்து ஓதுதலை நீங்கேன்.

(அ. சி.) நாடு முறவு கலந்து - உள்ளன்போடு. வீடு மளவும் சாகும்வரை.

(9)

8. அவவேடம்

(போலிக்கோலம்)

1627. ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்

வேடங்கள் கொண்டு வெருட்டிடும் [2]பேதைகாள்

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்

தேடியுங் காணீர் சிவனவன் தாள்களே.

(ப. இ.) கூடா ஒழுக்கத்தினராய்த் தவவேடம் கொண்டு பிறரை அஞ்சுவித்துத் திரிவார்க்குப் பயன் ஆடம்பரமான சோறு கறி உண்பதே

---

1. சூடுவேன். 8. திருவம்மானை, 17.

2. வலியில். திருக்குறள், 273.

" தவமறைந் " 874.

யாம் பேதைகளே! பிறப்பின் பயன் இதுவோ? சிவனார் திருவுருவினைக் கண்டவுடன் மெய்ம்மறந்து ஆடியும், பொய்யில் திருமுறை பாடியும், இன்பக் கண்ணீர் பெருக்கி அழுதும், மகிழ்ச்சி மேலூட்டால் அரற்றியும் இம்முறையாகத் தேடியுங் காணுங்கள். இதுவே பிறவிப்பயன்.

(அ. சி.) வேடங்கள் கொண்டு - பொய்யாகத் தவசி வேடம் பூண்டு. வெருட்டிடும் - மயக்கும்.

(1)

1628. ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை

ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்

மான நலங்கெடும் [1]அப்புவி யாதலால்

ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே.

(ப. இ.) திருவடியுணர்வில்லாக் கீழோர் சிவக்கோலம் பூண்டு சிறந்த தென்னாட்டகத்துக் கூடா ஒழுக்கம் புரிந்து பிறரை வஞ்சித்து ஏதும் உழையாது இரந்துண்டிருப்பர். அவர் அவ்வாறு இருப்பதால் நாட்டின் பெருமையும் நன்மையும் கெட்டொழியும். ஆகையால் அப் பொருந்தா வேடத்தாரை அவ் வேடத்தை நீக்கச்செய்து நாட்டுக்கு நன்மையும் இன்பமும் வாய்க்கும்படி செய்வது நல்லோர் கடனாகும். மானம் - பெருமை.

(அ. சி.) இருப்பினும் - சுகமாக இருந்தபோதிலும். ஆன நலம் - உண்மை வேடத்தால் ஆன நன்மை. கழிப்பித்தல் - நீக்கல்.

(2)

1629. இன்பமுந் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள

நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்

என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்

மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே.[3]

(ப. இ.) நாட்டவர் செய்யும் நன்செயலாகிய புண்ணியத்தால் இன்பமும், புன்செயலாகிய பாவத்தால் துன்பமும் நாட்டில் நிலைத்து நிற்கும். ஆகவே உலகாளும் வேந்தன் பொய் வேடங் கொண்டார்தம் இழிசெயலால் நாட்டிற்குத் துன்பம் உண்டாவதைக் கருதி ஒவ்வொரு நாளும் அப் பொய்வேடத்தாரை நாட்டினின்றும் அகற்றி மன்பதைகளைச் செம்மையாக வாழும் நெறியில் செலுத்தினால் அவர்கள் நன்கு வாழ்வர். இக்குறிப்பினையே திருவள்ளுவநாயனார், 'ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே, வேந்தமைவில்லாத நாடு' (740) என்றருளிச் செய்தனர்.

(அ. சி.) இறை - அரசன். நாடி - உண்மைத் தவசிகள் இன்னார் என்றும் பொய்த் தவசிகள் இன்னார் என்றும் ஆராய்ந்து பார்த்து.

(3)

---

1. வசையிலா. திருக்குறள், 239.

2. நாடோறு. " 520.

" நாடொறும். " 553.

" பெருமைக்கும். " 505.

1630. இழிகுலத் தோர்வேடம் பூண்பர்மே லெய்த

வழிகுலத் தோர்வேடம் பூண்பர்தே வாகப்

பழிகுலத் தாகிய பாழ்சண்ட ரானார்

கழிகுலத் தோர்கள் களையப்பட் டாரே.[1]

(ப. இ.) ஒழுக்கத்தால் தாழ்ந்த குடியிலுள்ளோர் தவக்கோலம் பூணுதல் உயர்ந்த ஒழுக்கம் கைக்கொண்டு மேலோராதற்கு. இது படியாதார் படித்துக் கற்றார் ஆவதை யொக்கும். வழிவழியாக ஒழுக்க மேன்மையால் உலகோர் வழிபடத்தக்க உயர்குடியில் தோன்றியவர் தவக்கோலம் பூணுதல் மக்களிற் சிறந்த தேவராதற்காம். பழிக்கப்பட்ட புன்செயலால் பிறப்பினை வீணாக்கிக் கழிக்கத்தக்க குலத்தராயுள்ளார். தவக்கோலம் பூண்பது தங்களை நாட்டைவிட்டு அகற்றுவிப்பதற்கேயாம்.

(அ. சி.) இழிகுலம் - இழிந்த ஒழுக்கங்களுள்ள குடி. வழி குலம் - பிறர் வழிபடக் கூடிய ஒழுக்கமுடைய குடி. பாழ்சண்டர் - வீணர், கொடியர். கழி குலத்தோர் - பிறரால் ஒதுக்கித் தள்ளப்படக்கூடிய ஒழுக்கமுள்ள குடி.

(4)

1631. பொய்த்தவஞ் செய்வார் புகுவர் நரகத்துப்

பொய்த்தவஞ் செய்தவர் புண்ணிய ராகாரேற்

பொய்யத்தவம் மெய்த்தவம் போகத்துட் போக்கியஞ்

சத்திய ஞானத்தால் தங்குந் தவங்களே.

(ப. இ.) தவத்தினைப் பொய்ம்மையாகச் செய்வார் இருளுலகம் புகுந்து இன்னலுறுவர். பொய்த்தவம் உள்ளத்தில் உண்மையின்றிக் கோலத்தால் மட்டும் நடித்தல். பொய்த்தவம் செய்வார் புண்ணியராகார். பின் அதற்குப் பயன் மெய்த்தவம்போன்று நடிப்பதால் நிலையிலா உலகவின்பம் பொருந்தாவழியில் சிறிதுண்டாம் ; அத்தனையே அத்தவப்பயன். உண்மையும் திருவடியுணர்வும் மேற்கொள்ளுதலால் மெய்த்தவப் பயன்கள் நிலைக்கும்.

(5)

1632. பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக

மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்

பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்

உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே.[2]

(ப. இ.) மெய்க்கோலம் பூண்பார்க்குக் கிடைக்கும் சிறந்த உணவு முதலிய உலகியலின்பங்கள் பொய்க்கோலம் பூண்பார்க்கும் எளிதாகக் கிடைக்கின்றன. பொய்க்கோலம் செய்வார் மெய்க்கோலம்போல் நடிப்பினும் தவப்பெருமையின் உண்மையினை அறிவார் தாங்கள் மெய்த் தவவழிநின்று மேன்மையுறுவர். மேலும் பொய்த்தவத்தார்மாட்டுப் பரிவும் கொள்வர். பிச்சை - தவவுணவு.

---

1. ஒழுக்கமுடைமை. திருக்குறள், 133.

2. சூல. 12. நரசிங்கமுனையர், 7.

" முன்பு. " கலிக்கம்பர், 6.

" அச்சிவன் 10. திருமந்திரம். 1848.

(அ. சி.) பொசித்தற் பயனாக - சாப்பாட்டுக்காக உய்வேடம் ஆகும் உணர்ந்து அறிந்தோர்க்கு - பொய்வேடத்திற்கே உலகத்தில் மரியாதையும் சோறும் கிடைக்கின்றனவே, மெய்யாகவே வேடம் பூண்டால் பலன் அதிகம் உண்டு. அம்மையினும் இன்பம் உண்டு என்று அறிவார்க்கு அப் பொய் வேடமே அவன் உய்வதற்கு உதவும் வேடமாகும்.

(6)

---

9. தவவேடம்

1633. தவமிக் கவரே தலையான வேடர்

அவமிக் கவரே யதிகொலை வேடர்[1]

அவமிக் கவர்வேடத் தாகாரவ் வேடந்

தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே.[2]

(ப. இ.) திருவடியுணர்வுக்கு வாயிலாகிய நற்றவமிக்கவரே தலையான சிவக்கோலமுடையவராவர். தவமில்லாத அவமாகிய பாவச் செயல் மிக்கவரே கொடுங்கொலைக்கு ஒரு சிறிதும் நடுங்காத வனவேடராவர். சிவக்கோலமாகிய தவக்கோலமிக்கவரே அக் கோலத்தைத் தாங்குந் தகுதியினராவர். மற்றவர்கள் அக் கோலத்தைத் தாங்குந் தகுதியுடைய வரல்லர்.

(அ. சி.) தலையான - சிறந்த.

(1)

1634. பூதி யணிவது சாதன மாதியிற்

காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை[3]

ஓதி யவர்க்கும் உருத்திர சாதனந்

தூதில் சிவயோகி சாதனந் தேரிலே.

(ப. இ.) சிவ அடையாளங்களுள் முதன்மை வாய்ந்தது திருவெண்ணூறு. அதனை 'அழகினுக்கு அணியாம் வெண்ணூறு அஞ்செழுத்து ஓதிச் சாத்தல்' என்பதனால் உணரலாம். இத் திருவெண்ணூறு உடம்பின்கண் பலவேறிடங்களில் அணியப்படுவது. செம்பொன்னாலாக்கிய குண்டலங்கள் இரண்டு காதுகளிலும் காணப்படும். வண்டனைய சிவமணிகள் முப்பத்திரண்டு கொண்ட கண்டிகை மார்பிடத்துக் காணப்படும். இனம்பற்றி நாவின்கண் 'சிவசிவ' என்னும் திருவைந்தெழுத்து வழுத்தப்படுதலும் கொள்க. இவையே சிவ அடையாளங்களாகும் குற்றமற்ற செறிவு நிலையாகிய சிவயோகிக்கும் இவையே அடையாளங்களாகும். செம்பொன் - தாமிரம். வண்டனைய - வண்டு போலும் பருமனான.

(அ. சி.) பூதி - விபூதி. வி: உபசர்க்கம். புமுதி என்னும் சொல் இடைக்குறைந்து முதல் நீண்டு பூதி என்று ஆயிற்று. ஆதியில் - முதலில்.

---

1. தவமறைந். திருக்குறள், 274.

2. தவமுந். " 262.

3. சந்த. 12. ஞானசம்பந்தர், 1194.

கண்டிகை - 32 உருத்திராக்க மணிகள் கொண்ட மாலை. ஓதியவர்க்கும் - வேதங்கள் ஆகமங்கள் படித்தவர்க்கும். உருத்திரசாதனம் - உரு - உடல்; திரம் - உறுதி, 'உடலுக்கு உறுதியைத் தரக்கூடிய சாதனம்.'

(2)

1635. யோகிக் கிடுமது வுட்கட்டுக் கஞ்சுளி

தோகைக்குப் பாசத்துச் சுற்றுஞ் சடையதொன்

றாகத்து நூறணி யாங்கக் கபாலஞ்

சூகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே.

(ப. இ.) உட்கட்டாகிய கோவணமும், கஞ்சுளியாகிய போர்வையும், திருச்சடையின்கண் மயிலிறகாலாகிய குல்லாவும், முழுவுடம்பும் அணியும் திருவெண்ணூறும், கையில் மண்டையோடும், அழகிய வலத் திருக்கையில் பிரப்பங்கோலும் சிவயோகியின் அடையாளங்களாகும். சூலத்தின் அடிப்படை என்பதை விளக்கத் தாய்ச்சூலை என்றும் முதன்மைக்காவல் என்பதை விளக்கக் கோவணம் என்றும் அற்ற மறைக்கும் துணிக்குப் பெயராயின. கோஅரணம் கோவணம் என்றாயிற்று.

(அ. சி.) உட்கட்டு - கோவணம், கஞ்சுளி - பொக்கணம், மேற் போர்வை. தோகைக்குப் பாசம் - மயிலிறகால் ஆய குல்லா. (குப்பாயம் - குப்பாசம் என வந்தது. சகரம் யகரமானது போலி) சூகத்த மாத்திரை - அழகிய கையில் பிடிக்கும் கோல் (க என்னும் எழுத்துக்கு ஹ என்னும் ஒலி. வளாகம் - என்னும் சொல்லொலிபோல்.)

(3)

1636. காதணி குண்டலங் கண்டிகை நூறும்

ஊதுநற் சங்கும் உயர்கட்டி கப்பரை

ஏதமில் பாதுகம் யோகாந்த மாதனம்

ஏதமில் யோகபட் டந்தண்டம் ஈரைந்தே.[1]

(ப. இ.) காதணியாகிய குண்டலமும், சிவமணியாலாகிய கண்டிகையும், ஓசை எழுப்பும் திருவைந்தெழுத்தும், வெண்சங்கும், மண்டையாகிய சட்டியும், திருநூற்றுமடலும், பாதக்குறடும், சிவயோகிக்குரிய அழகிய இருக்கையும், யோகப்பட்டமும், யோகத்தண்டும் என்னும் பத்து அடையாளங்களும் சிவயோகியர்க்கு உரியனவாகும்.

(அ. சி.) யோக அந்தம் - யோகத்துக்குரிய அழகிய. யோகப் படம் - யோகப்பட்டிகை. தண்டம் - யோக தண்டம்.

(4)

---

1. பத்துக்கொ. அப்பர், 4. 18 - 10.

10. திருநூறு

1637. நூலுஞ் சிகையும் உணரார்நின் மூடர்கள்

நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்

பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரமுயிர்

ஓரொன் றிரண்டினில் ஓங்காரம் ஓதிலே.[1]

(ப. இ.) அகநிலையையுணர்த்தும் புற அடையாளங்கள் நூலும் சிகையும் என்று உணராதார் பெருமூடராவர். நூலென்பது மறை முடிவாம் 'சிவய நம' வாகும். நுண்ணிய சிகை என்பது அச் சிவய நம என்னும் மந்திரப்பயனாம்

திருவடியுணர்வாகும். அதுவே சிவஞானமாம். அச் சிவஞான ஒழுக்கத்தில் நிலைநிற்போர் அந்தணராவர். பார்ப்பாராகிய மெய்கண்டார் ஓங்காரத்தின் கண் (952) உகரம் புரமாகவும், அகரம் உயிராகவும் கொள்வர். இனம்பற்றி மகரம் தளையாகவும் கொள்ளப்படும். மெய்கண்டார்: சித்தாந்தச் சைவ மாணவர்.

(அ. சி.) பாலொன்றும் - ஒழுக்கமுள்ள. பார்ப்பார் - உணருவார். பரம் - சிவம்.

(1)

1638. கங்காளன் [2]பூசுங் கவசத் திருநூற்றை[3]

மங்காமற் பூச மகிழ்வாரே யாமாகில்

தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி

சிங்கார மான திருவடி சேர்வரே.

(ப. இ.) அயன், அரி என்னும் இருவர்தம் முழு எலும்புக் கூட்டினைச் சுமக்கும் சிவபெருமான் கங்காளன் எனப்படுவன். அவன் ஆருயிர்கள் உய்வதற்குக் காவலாயுள்ளது - திருவெண்ணூறு என்றுணர்த்தக் கவசமாக அத் திருவெண்ணூற்றை அணிந்துகொள்கின்றனன். அத் திருநூற்றை எப்பொழுதும் மங்காமல் பூசுதற்கு மகிழ்வாரிடம் எத்தகைய வினைத் துன்பங்களும் தங்கா; சிவநிலையும் சாரும் - அழகிய திருவடிப்பேறும் கைகூடும்.

(அ. சி.) திருவடி. சாயுச்சிய முத்தி.

(2)

1639. அரசுட னாலத்தி யாகும்அக் காரம்

விரவு கனலில் வியனுறு மாறி

நிரவயன் நினமலன் தாள்பெற்ற நூதர்

உருவம் பிரமன் உயர்குல மாமே.[4]

---

1. கோலும். அப்பர், 5. 39 - 8.

" காதலாகிக் சம்பந்தர், 3. 49 - 1.

2. நங்கா. 8. திருச்சாழல், 11.

3. ஆறுலவு. 12. சம்பந்தர், 43.

" சிவசிவ. 10. திருமந்திரம், 2667.

4. குலம்பொல்லேன். அப்பர், 6. 95 - 8.

" சாத்தி. " 5. 60 - 3.

" சூல. 12. சண்டேசுரர், 21.

(ப. இ.) அத் திருவெண்ணூறானது அரசு, ஆல், அத்தி ஆகிய மூன்றின் சுள்ளிகள் சிவபெருமான் வீற்றிருந்தருளும் எட்டுத் திரு வுருவங்களின் ஒன்றாகிய சிவவேள்வித் தீயின்கண் ஒளிவிட்டெரிந்து உருமாறிக் காரியமாகக் காணப்படுவது. உருவம், அருவம், உருவருவம் என்னும் மூன்று நிலையும் கடந்த சிவபெருமான் திருவடியினைத் தலைக் கொண்ட மெய்யடியார் திருவுருவம் திருநூற்றுத் திருவுருவமாகும். அவர்களே திருமுறையுணர்ந்த திருவடிச் செல்வத்தராவர். அவர்களே மெய்ப்பொருளையடையும் உயர்குலத்தினராவர். 'இட்டார் பெரியோர்' என்பது திருநூறு இட்டார் பெரியோரென்பதே 'இடாதார் இழிகுலத்தோர்' என்பது திருநூறு இடாதார் இழிகுலத்தோர் என்பதே. இவையன்றி மக்களில் சாதி என்றும் உயர்வு தாழ்வு என்றுங் கூறுவது தமிழக மரபன்று. காரம் காரியம்; திருநூறு.

(அ. சி.) விரவு கனலில் வியன் உரு மாறி, அரசு....அக்காரம் விபூதியானது சிவாக்கினி காரியத்தில் அரசு, ஆல், அத்தி முதலிய சமித்துக்கள் எரிக்கப்பட்டு நூறு ஆக்கப்படுவதாலும் உண்டாகும் (இது ஒருமுறை). நிரவயன் - வடிவமற்ற சிவன். நூதர் - நூதியை உடையவர். பிரமன் உயர் குலம் - பிரமனால் படைக்கப்பட்ட மனிதர்களில் உயர்ந்த ஒழுக்கத்தை உடையவர் ஆவர். "மேதினியில் இட்டார் உயர்ந்தோர் இடாதார் இழிகுலத்தோர், பட்டாங்கில் உள்ளபடி" என்ற ஒளவையார் வாக்கை நோக்குக. இழிகுலம் என்றும் உயர்குலம் என்றும் திருமூலர் கூறியது சாதி அல்ல. ஒழுக்கத்தில், அறநெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் ஆவார். "பட்டாங்கில் உள்ளபடி" என்றது வேதாகமங்களில் கூறியபடி என ஒளவையாரும் எடுத்துக் காட்டியுள்ளார்.

(3)

---

11. ஞானவேடம்

1640. ஞானமி லார்வேடம் பூண்டும் நரகத்தர்
ஞானமுள் ளார்வேடம் இன்றெனில் நன்முத்தர்
ஞான முளதாக வேண்டுவோர் நக்கன்பால்
ஞான முளவேட நண்ணிநிற் பாரே.

(ப. இ.) திருவடியுணர்வாகிய சிவஞானம் கைவரப்பெறாதார் வேடம் பூண்டு பழிப்புக்கு ஆளாகி நரகத்திலாழ்வர். திருவடியுணர்வு கைவந்தோர் கோலமுள்ளாரெனினும் இலரெனினும் நல்ல வீடுபேற்றினை எய்துவர். மிக்க மகிழ்ச்சியை உண்டாக்குவோனாகிய நக்கன் சிவபெருமானிடத்து மெய்யுணர்வுகொள்ள விரும்புவோர் ஞானவேடத்தினைப் பொருந்திநிற்பர். நகுதல் - மகிழ்தல். ஞானவேடம் என்பது, 'ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும்

நம்சிவாயச் சொலாம்' என்று ஆளுடைய பிள்ளையார் அருளுமாற்றால் ஓவாது திருவைந்தெழுத்தினை உள்ளன்புடன் ஓதி ஒழுகுதல்.

(அ. சி.) நரகத்தர் - நரக புவனங்களை அடைந்து துன்புறுவர். இன்றெனின் - இன்றெனினும் - (உம் தொக்கி வந்துள்ளது) இல்லாமலிருந்தாலும். நக்கன்பால் - சிவனிடத்தில்.

(1)

1641. புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை

நன்ஞானத் தோர்வேடம் பூண்பர் அருள்நண்ணத்

துன்ஞானத் தோர்சம யத்துரி சுள்ளோர்கள்

பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லார்களே.

(ப. இ.) சிற்றுணர்வுடையோர் சிவக்கோலமாகிய ஞானவேடம் பூண்டும் பயனில்லை. திருவருள் கைவரப்பெற்றோர் சிவக்கோலம் இலரெனினும் சிவஞானத்தவரேயாவர். திரிபுணர்வாகிய துன்ஞானத்தோர் தத்தஞ் சமயமே முடிந்த மெய்ச்சமயமென்றும் ஏனைய சமயங்கள் சமயங்களல்லவென்றும் இருதலையும் ஆய்வின்றி ஒருதலையாகக் கூறும் சமயக் கடும்பற்றினர் என்னும் சமயக் குற்றமுள்ளோராவர். அக் குற்றமுடையார்பால் பின்ஞானத்தோராகிய மெய்ப்புணர்ப்பின் உணர்வுடையார் ஒன்றும் உரையாடார். பின்ஞானம் - பின்னல்ஞானம். பின்னல் - ஒன்றாய் வேறாய் உடனாய்ப் பிரிவின்றி நிற்கும் புணர்ப்பு; அத்துவிதம்.

(அ. சி.) புன்ஞானம் - சிறிது ஞானம். துன்ஞானத்தோர் - பொய் ஞானம் உடையவர். சமயத் துரிசு - சமயங்களில் உள்ள குற்றம்.

(2)

1642. சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்

அவமான சாதனம் ஆகாது தேரில்

அவமா மவர்க்கது சாதன நான்கும்

உவமான மில்பொருள் உள்ளுற லாமே.

(ப. இ.) மதிக்கத்தகாத தூயசெயல்களைத் துணையாகிய சாதன மெனக்கொண்டு நடப்போர் அரிய மக்கட்பிறப்பின் பயனை வீணாக்குகின்றனர். ஆராயின் சிவஞானிகட்கும் சிவயோகிகட்கும் அவை பொருந்தாதன. அவர்கட்குப் பொருந்திய துணை நான்காகும். அவை: சீலம், நோன்பு, செறிவு, அறிவென்பன. தனக்குவமை இல்லாதானாகிய சிவன் மேற்கூறிய நானெறியால் வழிபடுவோர் உள்ளத்து வீற்றிருந்தருள்வன்.

(அ. சி.) அவமான - பாபம் விளைக்கக்கூடிய. உவமானம் இல் பொருள் - தனக்கு உவமையில்லாதான்; சிவன். உள்ளுறலாம் - உள்ளத்திலே அடையலாம்.

(3)

1643. கத்தித் திரிவர் கழுவடி நாய்போன்று

கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்

ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே

செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே.

(ப. இ.) மெய்யுணர்வு இல்லாதார் கழுமரத்தடியிலுள்ள நாயினைப் போல் வீணாகக் கத்தித் திரிவர். குரங்குபோன்ற தாவும் மனமுடைய சிலர் கழுகுபோன்று பிறரைக் கொத்தித் திரிவர். சிவமெய்யுணர்வினர் பொறிகலன் முதலியன ஒத்துப் பொருந்திய உடலுடன் கூடியிருந்தும் உலகியற் செயல்களில் ஊன்றிய நாட்டமின்றி உலகச் செயலற்றுச் செத்தாரைப்போன்று திரிவர். சாதல் - தற்செயலறுதல். பிணம் பிறர்

செய்வனவற்றிற்கெல்லாம் இடங்கொடுத்துக் கிடக்கும். அதுபோல் சிவஞானிகள் தற்செயலற்றுத் திருவருள் இயக்க இயங்கித் திரிவர்.

(அ. சி.) கழுவடி - கழுமரத்தின் அடியில் நிற்கும். குரக்கு அளி ஞானிகள் - குரங்குபோன்று தாவித்திரியும் மனத்தையுடைய ஞானிகள்.

(4)

1644. அடியா ரவரே யடியா ரலாதார்

அடியாரு மாகாரவ் வேடமு மாகார்

அடியார் சிவஞான மானது பெற்றோர்

அடியா ரலாதார் அடியார்கள் அன்றே.[1]

(ப. இ.) அருளியக்கத் தன்முனைப்பற்று அதன்வழி இயங்கும் சிவ மெய்யுணர்வினர் மெய்யடியாராவர். அத் தகுதியில்லார் அடியாரும் ஆகார். அவர் கொள்ளும் கோலம் சிவக்கோலமும் ஆகாது. திருவடியுணர்வு பெற்றோர் மெய்யடியாராவர். அடியார் தன்மையில்லாதவர் ஒரு காலமும் மெய்யடியார்களாகார்.

(அ. சி.) அடியார் - பொறியும் உடலும் ஒத்துச் செத்துத் திரியும் சிவஞானிகள்.

(5)

1645. ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாந்[2]

தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே

ஆனவவ் வேடம் அருண்ஞான சாதனம்

ஆனது மாமொன்றும் ஆகா தவனுக்கே.

(ப. இ.) சிவஞானிக்கு நம்பியாரூரர்போன்று திருமணக்கோல மொத்த அழகிய கோலமும் தோற்றத்தாலும் பயனாலும் நன்மையேயாம். கொண்ட அத் திருவேடமும் சிவயோக வேடமேயாம். மேலும் அத் திருக்கோலம் அருள்ஞானத் துணையு(சாதன) மாகும். சிவஞானம் கைவரப் பெறாதார் கொள்ளும் கோலம் ஒருவகையானும் பொருந்தாதென்க.

(அ. சி.) சுந்தர வேடம் - அழகுள்ள தவ வேடம் ஒன்றும் - ஒரு வேடமும். அவனுக்கே - தவம் அல்லாத அவ் வழியில் உள்ளவனுக்கே.

(6)

1646. ஞானத்தி னாற்பத நண்ணுஞ் சிவஞானி

தானத்தில் வைத்த தனியால யத்தனாம்

மோனத்த னாதலின் முத்தனாஞ் சித்தனாம்

ஏனைத் தவசி இவனென லாகுமே.

(ப. இ.) திருவடியுணர்வாகிய ஞானத்தினால் சிவனிலை எய்துவோன் சிவஞானியாவன். இவன் உலகத்தினிடத்து நடமாடுங் கோயிலினுள் சிறந்த தனிப்பெருங் கோயிலோனாவன். வீணுரையாடா மோனமுடையனாதலின் வீடுற்ற முத்தனாவன். மேலும் திருவடிப்பேறுற்ற

---

1. தவமும். திருக்குறள், 262.

2. வாழிய. 12. தடுத்தாட், 127.

சித்தனுமாவன். உண்மைக்கோலம் இல்லாத ஏனைத் தவத்தர் இவனோடொத்துப் பேசுந் தகுதியினரல்லர்.

(அ. சி.) தானத்தில் - உலகத்தில். தனியாலயத்தன் - உள்ளம் பெருங்கோயிலாக உடையவன். ஏனைத் தவசி - பொய் வேடத்தையுடைய தவசி. இவன் - உண்மை வேடமுள்ள சித்தன்.

(7)

1647. தானற்ற தன்மையுந் தானவ னாதலும்

ஏனைய வச்சிவ மான இயற்கையுந்

தானுறு சாதக முத்திரை சாத்தலு

மேனமும் நந்தி பதமுத்தி பெற்றதே.[1]

(ப. இ.) யான், எனதென்னும் செருக்கற்ற தன்மையும், சிவனருளால் தான் சிவனாதலும், மற்றைய உலகிற் காணப்படும் இயங்கு திணை நிலைத்திணைப் பொருள்களனைத்தும் சிவத்தொடர்பால் செய்யுள் நலம்போல் சிவமாகக் காணப்படுதலும், தான்கொள்ளும் கோலத்துக்குத் தக்கவாறு துணையாகிய சாதகங்கொள்ளுதலும், உண்கலம் ஏற்றலும் முதலியன நந்தியாகிய சிவன் திருவடிநிலை பெற்றவர்கட்குரிய அடையாளங்களாகும். செய்யுள் பூமாலையொக்கும், உரைநடை பூச்சரமொக்கும். 'பூவுதிரப் போஞ்சரம் போற்றுமுரை நெஞ்சினில்லா, பூவுதிரா மாலைசெய்யுள் போற்று.'

(அ. சி.) தானற்ற தன்மை - 'யான்', 'எனது' என்னும் பற்று நீங்கின தன்மை தான் அவனாதல் - அவனே தானேயாகிய நெறி; தான் சிவமாந் தன்மை எய்தி நிற்றல். ஏனைய - தன்னைத் தவிர்த்து மற்றத் தாவர சங்கமங்கள். தானுரு - தான்கொண்ட. சாதக முத்திரை - வேடமும், பழக்கமும். ஏனமும் - பிச்சைப் பாத்திரமும்.

(8)

---

12. சிவவேடம்

1648. அருளால் அரனுக் கடிமைய தாகிப்
பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி
இருளான தின்றி யிருஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவவேடத் தோரே.

(ப. இ.) திருவட்டுணையால் சிவபெருமானுக்கு அடிமையாகி அச்சிவனார் உடைமையாகிய தன் உடல் அவர் உறையும் பொற்பதி என்று நாடுதலாகிய உண்மையுணர்வு கொள்ளுதலால் அறியாமையாகிய மலவிருள் அகலும். அகலவே தன் முனைப்பால் செய்யும் இருவகைச் செயல்களும் அகலும். அவை அற்றவர்கள் தெளிவினையுடைய மூளா அடிமையராவர் அவர்கொள்ளும் சிவக்கோலமே மெய்யான தவக்கோலமாகும்.

(அ. சி.) பொருளாம் - மெய்ப்பொருள் வெளிப்படுதற்குரிய. பொற்பதி - சிவம் தங்கும் அழகிய இடம். அருள் - அஞ்ஞானம்.

(1)

---

1. அவனேதானே. சிவஞானபோதம், 10.

" ஊனினுள். அப்பர், 4. 29 - 1.

1649. உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா
உடல்கழன் றால்வேடம் உடனே கழலும்

உடலுயிர் உண்மையென் றோர்ந்துகொள் ளாதார்

கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே.

(ப. இ.) உடலிற் காணப்படும் வேடமாகிய திருக்கோலம் உயிரினைப் பொருந்தி உயிரினுக்குத் துணையாகாது. உடல் உயிரை விட்டு நீங்கினால் அவ் வேடமும் உடனே நீங்கும். உடலின்கண் தங்கும் உயிர் அழிவில்லாத உண்மையான மன்னுயிராகும். இத்தகைய உண்மையினை உணர்ந்துகொள்ளாதார் கடலிற்பட்ட மரக்கட்டை இடையறாது அங்கும் அங்கும் அலைவதுபோன்று பிறவிப் பெருங்கடலினை நீந்தமாட்டாது பிறந்து இறந்து உழன்று அதனுள் அழுந்துவர்.(அ. சி.) உடல் உயிர் - உடலில் உள்ள உயிர். கடலில் அகப்பட்ட கட்டை - கடலில் அகப்பட்ட கட்டையைப்போல் பவக்கடலில் அகப்பட்டுப் பல அண்டங்களிலும் பிறவியெடுத்து எடுத்து அலைவர்.

(2)

1650. மயலற் றிருளற்று மாமன மற்றுக்

கயலுற்ற கண்ணியர் கையிணக் கற்றுத்

தயலற் றவரோடுந் தாமேதா மாகிச்

செயலற் றிருந்தார் சிவவேடத் தாரே.[1]

(ப. இ.) உலகப் பொருளின்கண் மருளாகிய மயலற்று அதற்கடிப்படையாகிய ஆணவவல்லிருளற்று, அதன் வயத்தாகிய கரியமன மற்று, அம் மனம் பற்றும் கயல்போலும் கண்ணையுடைய பொதுமகளிர் தம்கை இணக்கம் அற்று, இவை யனைத்தும் அறுதற்கேதுவாகிய பொதுத்தையலர் கூட்டமற்ற மெய்யடியாரோடு அவரே தாமாகித் தன் முனைப்பாகிய செயலற்று ஒழுகுவார் உண்மைச் சிவக்கோலத்தராவர்.

(அ. சி.) கையிணக்கு - கூட்டுறவு. தயலற்றவர் - தையல் அற்றவர்; பெண் ஆசை இல்லாதவர். செயல் - உலக விவகாரம்.

(3)

1651. ஓடுங் குதிரைக் குசை[2]திண்ணம் பற்றுமின்

வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே

நாடுமின் நந்தியை நம்பெரு மான்தன்னைத்

தேடும்இன் பப்பொருள் சென்றேய்த லாமே.

(ப. இ.) ஓடுங் குதிரையாகிய உயிர்ப்பின் குசையாகிய அளவுட்படுத்தும் கடிவாளத்தைத் திண்ணமாகப் பற்றி உயிர்ப்பினை அடக்குங்கள். இன்றியமையாத அச் செயலின்றி வெறும் பொய்க்கோல மட்டும் பூண்டு திரிவதால் பயனொன்றும் இல்லை. மாந்தர்கள், அப் பொய்க்கோலம் கொள்ளுதல் வேண்டா. நந்தியாகிய சிவனை உளத்தின்கண்

நாடுங்கள்; திருவருளால் நம் பெருமானை உணர்வின்கண் தேடுங்கள் .தேடினால் அழியா உண்மை அறிவு இன்பப்பொருளாகிய

---

1. பொருட்பொருளார். திருக்குறள், 914.

2. குசையு. அப்பர், 5. 71 - 1.

சிவனார் திருவடி இன்பத்தினைச் சென்றெய்தி இன்புறுதல் கூடும். இதுவே, 'தேடிக் கண்டுகொண்டேன்' என்பதாகும்.

(அ. சி.) குசை - கடிவாளம் ஓடு.....பற்றுமின் - ஓடுகின்ற பிராண வாயுவை அடக்கி, வீண்போகாது செய்மின்.

(4)

---

13. அபக்குவன்

(பொய்க்குரு)

1652. குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்

குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்

குருநடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்

குருடுங் குருடுங் குழிவிழு மாறே.

(ப. இ.) உண்மை உணர்ச்சியில்லார் அகக்கண் குருடாகிய அறியாமையினை நீக்கும் மெய்க்குருவினைக் கைக்கொள்ளார். அறியாமையை அகற்றும் நெறியே தெரியாத பொய்க்குருவினை மெய் எனக் கொள்வர். அங்ஙனங் கொள்ளுவதால் வழிகாட்டத் தெரியாத குருடுங் குருடுங் கூடிக் குருட்டு ஆட்டம் கொண்டு குழியில் விழுவதுபோன்று அகக்கண் இல்லாத பொய்க் குருவினைக் கொண்டு கருக்குழியில் வீழ்வர்.

(அ. சி.) குருடு - அஞ்ஞானம். குழி விழுமாறு - குருடும் குருடும் சேர்ந்தால் குழியில் விழுவதுபோல, அஞ்ஞானம் நீங்காத குருவைக் கொண்டால் கொண்டவனும் குருவும் பிறவிக் குழியில் விழவேண்டியது தான்.

(1)

1653. மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி

நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்

வினைப்பயன் போக விளக்கியுங் கொள்ளார்

புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே.

(ப. இ.) மறைப்பாற்றல் மனத்தை வினைக்கூடாக இயக்குவதோர் மாயக்கண்ணாடியாகும். முகப் பார்க்கும் கண்ணாடியில் முன்புறம் ஒளியுள்ளதாகக் காணப்படும். பின்புறம் பூச்சுள்ளதால் மறைத்து மழுங்கலாகக் காணப்படும். ஆருயிர்களை உலகத்துடன் நடத்துங்கால் பின்புற வாயிலாகவே நடத்துகின்றது. அவ் வுயிர்களைச் சிவத்துடன் நடத்துங்கால் முன்புற வாயிலாகவே நடத்துகின்றது. முன்புறம் என்பது திறப்பும் பின்புறம் என்பது மறைப்பும் ஆகும். நினைப்பினால்கூட அம் மறைப்பாற்றலின் சாயலையுங் காணமாட்டார். ஆருயிர்கள் தாம் செய்து நுகரும் வினைப்பயன்களை நூன்முறையான் விளக்கியும் மனங்கொள்ளார். இத்தகையோர் சிறப்பு எய்த விரும்பாது பிறப்பு எய்த விரும்பித் தாழ்ந்து போவோராவர்.

(அ. சி.) மாயக்கண்ணாடி - திரோதான சத்தி. இச் சத்தி முன்புறம் ஒளியுள்ளதாயும் பின்புறம் மங்கலாயும் உள்ள முகம் பார்க்கும் கண்ணாடி

போன்றது. ஒருவனுக்குப் பந்தகாலத்தில் பின்புறத்தையும் முத்தி காலத்தில் முன்புறத்தையும் இச் சத்தி காட்டி நிற்கும். வினைப்.......கொள்ளார். தங்களுடைய வினைகள் ஒழியத் திரோதான சத்தியால் விளக்கத்தைப் பெறுவதற்கும் முயற்சி செய்யார். புறக்கடை இச்சித்து - சத்தியின் பின்புறத்தையே இச்சித்துப் பந்தத்திலேயே மூழ்கிக் கிடப்பர்.

(2)

1654. ஏயெனில் என்னென மாட்டார் பிரசைகள்

வாய்முலை பெய்ய முதரநின் றூறிடுந்

தாய்முலை யாவ தறியார் தமருளோர்

ஊனிலை செய்யும் உருவிலியாம் தானே.[1]

(ப. இ.) குடிபோல் வாழும் மக்கள் அவர்களை அன்பாக அழைத்து மொழியினும் மனங்கொள்ளமாட்டார். பாலுண்குழவி வாய் வைக்குங்கால் தாய்முலை சுரப்பதுபோல், அப் பாலால் இனிமை யுண்டாவதுபோல் நடப்பாற்றலாகிய அம்மையை நாடிப் பிறப்பற வேண்டினால், அவ்வுயிரைச் சிவத்துடன் கூட்டுதற்கு அருளுடம்பையும் அவ் வுடம்பு வளர்வதற்குத் தகுதி வாய்ந்த செந்தமிழ்த் திருவைந்தெழுத்தையும் அவள் அருளுவள். அருளுடம்பு பாலையொக்கும். திருவைந்தெழுத்து இனிமையை ஒக்கும் வேண்டுதல் வாய் வைத்தலையொக்கும். அவ் வருள் பிறவாமையை அருளும் உருவில்லாதவளாவள்.

(அ. சி.) ஏய் : விளித்தற்குறி. பிரசைகள் - மானிடர். வாய் முலை பெய்ய மதுரம் - முலையில் வாய் வைக்க மதுரமான பால். தாய் முலை ஆவது - திரோதான சத்தி தாய்போன்று இருக்கும் தன்மையை. தமருளோர் - தெரிந்து சத்தியை உறவாகக் கொண்டவர்க்கு. ஊனிலை செய்யும் சரீரத்தை அழியாமல் செய்யும். அஃதாவது பிறவி இல்லாமல் செய்யும்.

(3)

1655. வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து

நூயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்

தூயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்

பேயென்றிங் கென்னைப் பிறர்தெளிகி லாரே.[2]

(ப. இ.) சொல்லும் நினைப்பும் செயலும் ஒல்லும்வகை ஒன்று போல் இணைந்திருப்பனவே உறுதியாகும். என்றும் பொன்றா வாழ்வு பெறும் உரிமையுடைய உயிர் நெடுந்தகை என்று அழைக்கப்பெறும். அத்தகைய உறுதி நெடுந்தகையே முப்பொறிகளும் ஒன்றுபடாமல் ஒன்றும் செய்யற்க. ஒன்றுபட்டுச் சிவனை வழிபட்டால் உயிர் தூயுருவாகிய சிவனாகும் யான் அவ் வுண்மையைத் தெளிவன். தெளிந்த பின் பெரும்பித்தும் பிடி விலகாமையும் உள்ள பேயென்று பிறர் என்னைத் தெளியமாட்டார்.

---

1. பிள்ளை. 12. திருக்குறிப்புத்தொண்டர், 22.

2. கண்டவர். . . . . 12. காரைக்காலம்மையார், 54.

" கையொன்று. பட்டினத்துப் பிள்ளையார், 4.

" பெண்டிர். திருவுந்தியார், 35.

(அ. சி.) நூயொன்று செய்ய - ஆன்மாவின் கை ஒன்று செய்ய. தூயென்று - தூ உருவினனான சிவன் என்று. பேய் என்று - பேய்போல்பவன், சிவப்பித்துப் பிடித்தவன்.

(4)

1656. பஞ்சத் துரோகத்துப் பாதகர் தம்மையும்

[1]**யஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்**

விஞ்சச்செய் திப்புவி வேறே விடாவிடிற்

பஞ்சத்து ளாய்ப்புவி முற்றும்பா ழாகுமே.[2]

(ப. இ.) பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் ஐப்பெரும் பாவங்களும் அஞ்சாது நெஞ்சார இயற்றுவோர், நம்பகக் கேடுசூழ் பெரும் பாதகராவர். அவர்களையும் ஏனையோரும் அவ்வாறு செய்து பாதகர் ஆகாவண்ணம் அஞ்சி ஒழுகும்படி தண்டித்தல் வேந்தன் கடனாகும். அத் தண்டமாவது அக் கொடியோரை நாடுகடத்தலேயாம். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டினில் மழை பெய்யாது விளைவு குன்றிப் பஞ்சமுண்டாகும்.

(அ. சி.) பஞ்சத் துரோகம் - பொய், கொலை, கள், களவு, காமம். பஞ்சச் சமயத்தோர் - பஞ்சாயத்தோர்; நியாயாதிபதிகள். விஞ்ச - மிகுதியாக. புவி வேறே - நாடு கடத்தி. பஞ்சத்துளாய். பஞ்சம் ஏற்பட்டு.

(5)

1657. தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ்

சிவத்திடை நின்றது [3]தேவர் அறியார்

தவத்திடை நின்றறி யாதவர் எல்லாம்

பவத்திடை நின்றதோர் பாடது வாமே.

(ப. இ.) சிவனை மறவாது செந்தமிழ்த் திருவைந்தெழுத்தோதி ஒழுகும் பெருந்தவத்திடை நின்றவர் உடம்புள்ள துணையும் ஊழ்வினை நுகர்வு நீங்காதாகலால் அத் தவத்தோர்க்கு அந் நுகர்வு உடலோடு நின்றுவிடும். அவர் உள்ளத்தின்கண் நின்றுநிலைபெறும் மாறில் நுகர்வு சிவ நுகர்வேயாம். இவ்வுண்மையினைச் செருக்கறாத் தேவரும் அறியார். நற்றவமாகிய சிவ வழிபாட்டில் நின்று அறியமாட்டாதவரெல்லாரும் பிறப்பிடை நின்று துன்புறுவர்.

(அ. சி.) உண்ணுங் கன்மம் - கன்ம அனுபவம். சிவத்திடை நின்றது - சிவானுபவமாக இருந்தது. பவத்திடை. பிறப்பினில். ஓர் பாடு - ஒப்பற்ற துன்பம்.

(6)

1658. கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்

தின்றலுஞ் சுவைத்தலுந் தூமை செய்தலும்

பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்

என்றிவை இறைவன்பால் இயற்கை அல்லவே.

(பாடம்) 1. பஞ்சச்.

2. முறைகோடி. திருக்குறள், 559.

3. இவனுலகில். சிவஞானசித்தியார், 10.

(ப. இ.) நற்றவத்தால் சிவத்தையுற்றவர்பால் செருக்குக்கொண்டு சினத்தலும், நட்பு உறவு கருதலும், பயன்கருதிச் செயல் செய்தலும், முனைத்துத் தின்றலும், சுவைத்தலும், தூமை செய்தலும், முறையின்றித் தாழ்த்தலும், உயர்த்தலும், தற்பெருமை கூறுதலும் ஆகிய நிகழ்ச்சிகள் மறந்தும் உண்டாகா. காரணம் என்ன என்றால், இவையொன்றும் வழி மறந்தும் உண்டாகா. காரணம் என்ன என்றால், இவையொன்றும் வழி படப்படும் சிவத்தின்பால் இயற்கையாகவே என்றும் இன்மையான் என்க.

(அ. சி.) கன்றல் - கோபித்தல். பின்றல் - தாழ்ச்சி அடைதல். பிறங்கல் - மேன்மையை யடைதல்.

(7)

1659. விடிவ தறியார் வெளிகாண மாட்டார்

விடியில் வெளியில் விழிக்கவு மாட்டார்

கடியதோ ருண்ணிமை கட்டுமின் காண்மின்

விடியாமை காக்கும் விளக்கது வாமே.

(ப. இ.) அக நிகழ்ச்சியாகச் சித்தம் சிவத்தினிடத்தில் மறவா விழிப்பாக நிற்பது விடியல் என்பதை யுணரார். அறிவுப்பெருவெளியையும் காணமாட்டார். அச்சமில்லாத அப் பெருவெளியில் நினைப்புக் கொள்ளவும் மாட்டார். காவலாக உள்நோக்கம் கொள்ளுதற்பொருட்டுக் கண்ணிமையை அடக்குமின். அகநோக்கிக் காண்மின். பிறவாற்றால் நீங்காத ஆணவவல்லிருளைத் தடுத்து நீக்கும் திருவடியுணர்வாகிய விளக்கு அவையாகும்.

(அ. சி.) விடிவது - சித்தத்தைச் சிவனிடம் வைப்பது. வெளி - ஞானம். வெடியில் - அச்சமில்லத. வெளியில் - பரம ஆகாயத்தில் விழிக்கவும் பார்வையைச் செலுத்தவும். கடி - இன்பத்துக்குக் காரணமாயுள்ள. உள் - உள்ளத்தை, மனத்தை. நிமை - கண் இமைப்பொழுது. விடியாமை - அஞ்ஞான இருள். காக்கும் - தடுக்கும். விளக்கதுவாம் - ஞானம் உண்டாம்.

(8)

1660. வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்

பெத்த மறமுத்த னாகிப் பிறழ்வுற்றுத்

தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு

பித்தான சீடனுக் கீயப் பெறாதானே.

(ப. இ.) தொன்மையே அமைந்த பிணிப்பியாகிய பசுத்தன்மைக்குரிய ஆணவவல்லிருளை மாற்று நன்னெறியொழுகிக் கட்டற்று வீடுபெற்றுடையோனாகிப் பல்லாற்றானும் நிலலாவுலகியலின் நிலையா வாழ்க்கையில் மாறுதலுற்று, மெய்ப்பொருளை இடையறாது நினைந்து திருவடியில் தலைப்படுதல் நன்மாணாக்கனுக்குரிய நலங்களாகும். இந் நெறியில் வாராது உலகியல் மயக்கங்கொண்ட மாணவர்க்கு அருமறையாகிய உபதேசம் செய்தல் கூடாது. ஈதல்: ஈண்டு உபதேசம் செய்தல்.

(அ. சி.) வைத்த - அநாதியாய் உள்ள. பசுபாசம் - பசுத்துவத்துக்குக் காரணமான ஆணவம். பெத்தமற - பந்தம் நீங்க. பிறழ்வு உற்று - மாறுதலை அடைந்து. தத்துவம் முன்னி - மெய்பொருளைச் சிந்தித்து. தலைப்படாது - மேம்பாடு அடையாது. பித்தான மயங்கிய. ஈயப்பெறா உபதேசிக்கப்படா.

1661. மன்னும் மலம்ஐந்தும் மாற்றும் வகையோரான்

துன்னிய காமாதி தோயுந் தொழில்நீங்கான்

பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதான்

அன்னிய னாவன் அசற்சூட னாமே.

(ப. இ.) காரணத்தின்கண் மாறா நிலைபேறுடைய ஆணவம் கன்மம் மாயை மறைப்பாற்றல் மாயேயமாகிய காரியத்தன்மை ஆகிய மலம் ஐந்தும் மாற்றும் வழிவகைகளை ஆராயான்; பொருந்திய ஆறு கோடி மாயா சத்திகளாம் செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்தமானம், மாணாவுவகை என்னும் குற்றங்களில் மீண்டும் மீண்டும் விழும் செய்கையில் நீங்கான்; முற்றும் கலந்த பொய்ம்மையன்; பிறப்பு இறப்பு ஆகிய இவற்றிற்கு அஞ்சான். இத்தகையோன் நன்னெறிக்கு வேறான புன்னெறியனாவன். அவனே உண்மைக்கு மாறுபட்ட பொய்ம்மை மாணவனும் ஆவன். அசற்சூடன்: அசத் + சூடன், அசத் - பொய்ம்மை.

(அ. சி.) மலம் ஐந்து - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி அல்லது வைந்தவன், ஓரான் - சிந்தியான். தோயும் - பொருந்தும். பின்னிய - நிறைந்த. அன்னியன் - உபதேசத்திற்குப் புறம்பாவான். அசற்சூடன - பயனற்ற சூடன்.

(10)

---

14. பக்குவன்

(மெய்க்குரு)

1662. தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்

பழுதறி யாத பரம குருவை

வழியறி வார்நல் வழியறி வாளர்

அழிவறி வார்மற்றை யல்லா தவரே.

(ப. இ.) செந்தமிழ் வேதாகமங்கள் கண்ணாகக் குற்றம் ஒரு சிறிதும் இல்லாத மேலான சிவகுருவின் திருவடியைச் சார்ந்து அவரை வழிபாடு செய்தலையறிவார் வீடுபேறு எய்தும் நன்னெறியறிவாராவர். இவ் வுண்மை அறியாதவர் பிறந்து இறந்து உழலும் அழிவுநெறியினையே அறிவர். அவர்கள் வீடுபேற்றுக்கு உரியர் அல்லாதவராவர்.

(அ. சி.) தொழில் - கன்மங்கள். சுருதி - வேதம், ஆகமம். பழுது - குற்றம். வழியறிவார் - வழிபட அறிவார். அழிவறிவார் - அழிவினைச் செய்யும் துன்மார்க்கம் அறிவார்.

(1)

1663. பதைத்தொழிந் தேன்பர மாவுனை நாடி

யதைத்தொழிந் தேன்இனி யாரொடுங் கூடேன்

சிதைத்தடி யேன்வினை சிந்தனை தூர

உதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே.

(ப. இ.) சிவபெருமானே! பிறப்புத் துன்பங்கண்டு அஞ்சிப் பதறினேன். உன் திருவடியை நாடி இடைவிடாது அலைந்தேன். அறியாதார் உடம்பினை இனியாரென்று கூறுகின்றனர். அவ் வுடம்புடன் கூடேன். அடியேனின் இருவினையினையும் சிதைத்து மனக்கவலை தூரப் பிறப்பினை உதைத்து, அடியேனை உவந்து ஆண்டருற்வாயாக.

(அ. சி.) பதைத்து - பதறி. பரமா - சிவனே. அதைத்து - அலைந்து. உதைத்து - நூக்கி. உடையாய் - என்னை அடிமை கொண்டவனே.

(2)

1664. பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை

விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்

சிதைக்கின்ற சிந்தையைச் செல்வே நிறுத்தி

இசைக்கின்ற அன்பருக் கூயலு மாமே.

(ப. இ.) பிறப்பு இறப்புகளில் படும் துன்பத்தை நினைக்கின்றபோதே உள்ளம் பதைக்கின்றது. மேலாகிய சிவனைச் சேரும் திருவடியுணர்வைப் புருவ நடுவினின்றும் நோக்கி, அந் நோக்கத்திற்கிடையூறாக உலகியலிற் செல்லும் மனத்தைத் தடுத்து நேரே நிறுத்தி சிவன் திருவடியில் இடையறாது சேர்க்கின்ற மெய்யன்பர் அருமறை பெறுதற்குரியராவர். அருமறை - உபதேசம். செந்தமிழ்த் திருவைந்தெழுத்து.

(அ. சி.) பதைக்கின்றபோது - பிறப்பு இறப்பை நினைத்துப் பதறுகின்ற காலத்து. பரம் என்னும் - சிவஞானம் என்னும். மேனின்று - புருவ மத்தியில் நின்று. சிதைக்கின்ற - கெடுதலைச் செய்கின்ற. செவ்வே - நேரே. இசைக்கின்ற - ஈசன் திருவடியில் பொருந்தி வைக்கின்ற.

(3)

1665. கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக

உள்ள பொருளுடல் ஆவி யுடனீக[1]

எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று

தெள்ளி யறியச் சிவபதந் தானே.

(ப. இ.) உய்யுநெறி காட்டும் செய்ய சிவகுருவினை ஆராய்ந்து கொள்க. அச் சிவகுருவின்பால் உடைமை, உடல், உயிர் என்னும் மூன்றனையும் ஒருங்கூக. அவன் நிழல்போல் எள்ளத்தனை காலமும் அவனை விட்டு நீங்காது உடனுறைக. அவனருளால் பொருளுண்மை தத்துவ உண்மை உணர்ந்தவர் சிவனடிசேர்வர்.

(அ. சி.) உள்ளபொருள் - உரிமையாயுள்ள பொருள். எள்ளத் தனையும் - சிறிதும். தெள்ளி அறிய - ஆராய்ந்து உணர.

(4)

1666. சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்நண்டு

ஓதிய நாளே உணர்வது தானென்று

நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது

ஆதியும் ஏதும் அறியகி லானே.

(ப. இ.) உலகோர் கொள்ளும் முறைமையுள் அருமறைகொள்ளச் சோதி. சிவாகம் முதலிய நாள்களும்; தேள், நண்டு முதலிய கோள்களும்,

---

1. அன்றே. 8. குழைத்தபத்து, 7.

திங்கள் முதலிய கிழமைகளும் சிறந்தனவாக நினைப்பவர்க்கல்லது அதன் முதலும் காரணமும் அறியவொண்ணாவென்க.

(அ. சி.) சோதி - சுவாதி நாள். தேள் - விருச்சிகம். நண்டு - கடகம், ஓதிய நாள் - சொல்லப்பட்ட சுப வாரங்கள். ஆதியும் ஏதும் - முதலும் காரணமும்.

(5)

1667. தொழிலார மாமணித் தூய்தான சிந்தை

எழிலால் இறைவன் இடங்கொண்ட போதே

விழலார் விறலாம் வினையது போகக்

கழலால் திருவடி கண்டரு ளாமே.[1]

(ப. இ.) சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நான்மை நற்றவத்தினின்று மனம்தனை மாமணிலிங்க வைப்பாகக் கொண்டு வழிபடச் சிவபெருமானும் அந் நெஞ்சத்திடமாக உறைந்தருள்வன். அவன்

உறைந்ததும் பயனில் முயற்சிகளில் சென்று ஆணவ வலிமை கொண்டு திரியும் சிறப்பிலாருடன் சேரும் தூச்சேர்கை அகலும். அஃதகலும் பொருட்டுக் கழலணிந்த திருவடியைக் காண்பாயாக. காணவே அருள்நிறை வுண்டாகும்.

(அ. சி.) தொழிலார - சரியை முதல் நாற்பாதங்களிலும் சித்தி பெற்ற. விழலார் - சரியை முதலிய மார்க்கங்களை அனுசரியாத வீணருடைய. விறலாம்-வலிமை பொருந்திய.

(6)

1668. சாத்திக னாய்ப்பர தத்துவந் தானுன்னி

ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே

ஆர்த்த பிறவிபி னஞ்சி யறநெறி

சாத்தவல் லானவன் சற்சூட னாமே.

(ப. இ.) அறிவும் அமைதியுமாகிய தலைமைக்குணம் உடையனாய் உண்மைப்பொருளாகிய சிவனடியை மறவாமல் நினைந்து, கடவுள் உண்டெனுங் கொள்கை வேறுபாடுடைய நெறிகளின் அடிப்படைத் தோற்றத்தை மேற்கொண்டு, எல்லையின்றிப் பிணித்துவரும் பிறவியினுக்கு அஞ்சிச் செந்நெறியாகிய அறநெயின்கண் உறைத்துநிற்க வல்லான் நன் மாணவனாவன்.

(அ. சி.) சாத்திகனாய் - சத்துவகுணம் உடையவனாய். ஆத்திக பேத நெறி - கடவுள் உண்டென்னும் பல சமயங்கள். ஆர்த்த - பந்தித்த. சாத்தவல்லான் - கைக்கொள்ளவல்லான்.

(7)

1669. சத்தும் அசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்

சித்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்

பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்

சத்தியில் இச்சைத் தகுவோன்சற் சூடனே.[2]

---

1. மறப்பித்துத். சிவஞானபோதம், 12. 2 - 1.

2. உணருரு. " 6.

" யாவையும். " 7.

(ப. இ.) நிலைப்பும் அறிவும் உள்ளனவாகிய சிவமும், நிலையில்லனவும் அறிவில்லனவும் ஆகிய காரியமல கன்ம மாயைகளும் குரு வருளால் நினைந்து மலப்பிணிப்போடு கூடிய அறிவுப் பொருளாகிய ஆன்மாவை, அப் பிணிப்பின்றும் வேறுபடுத்திச் சிவபெருமான் திருவருள் கைகாட்டுதலால் முழுக்காதலாம் பத்தியினால் திருவடியுணர்வு பெறுவர்.

பெறவே, இடையறா வணக்கம் புரிவர். திருவடிப் பேரின்பத் தின்கண் அன்புமூதூரும். அத்தகையோன் நன்மாணவன் ஆவன். காரணமல கன்மமாயைகள் நிலைப்புள்ளன. ஆனால் அறிவில்லன. கைகாட்டல் - துணைபுரிதல். தகுவோன் - தகையோன்.

(அ. சி.) சித்தை உருக்கி - பாசத்தொடு கலந்த சித்துருவனான ஆன்மாவை வேறுபிரித்து. ஆனந்த சத்தி - முத்தி.

(8)

1670. அடிவைத் தருளுதி யாசானின் றுன்னா

அடிவைத்த மாமுடி மாயப் பிறவி

அடிவைத்த காய அருட்சத்தி யாலே

அடிபெற்ற ஞானத்த னாசற்று ளோனே.

(ப. இ.) சிவகுருவே இப்பொழுதே உன் திரவடியை அடியேன் முடிமூதே வைத்தருள் என்று உள்ளன்புடன் நினைந்தால், தொன்மையை புல்லிய ஆணவல்லிருளும் துன்பத்திலே முடியும் மாயப்பிறவியும் யாவற்றையும் ஆதியாய் நின்று தொடங்கி இயக்கியருளும் அறிவுப் பெரு வெளியில் திகழும் திருவருளம்மை அருளால் அவை முற்றும் அகலும். அகலவே திருவடிஞானம் பெற்ற திருவாளனாவன். அவனே குற்றமற்ற நற்றவனாவன்.

(அ. சி.) இன்று உன்னா - இப்பொழுது நினைத்து. அடிவைத்த - தொடங்கிய. காய - பரம ஆகாய. அடிபெற்ற ஞானம் - நிலைத்த ஞானம். ஆசு - குற்றம்.

(9)

1671. சூராரு ஞானத்தின் இச்சை செலச்செல்ல

வராத காதல் குருபரன் பாலாகச்

சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோன்

ஆராயும் ஞானத்த னாமடி வைக்கவே.

(ப. இ.) திருவடிப்பேற்றிற்கு உரித்தாய சிவஞானத்தில் ஆராக் காதல் மூதூர குருபரன் திருவடியில் ஏனையார்க்கு வாராத பெருங்காதல் உண்டாகும். குருவருளான் அன்றி எய்தப்பெறாத திருவடிப்பேற்றிற்குத் துணையாகிய சூலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நான்மையும் கைகூடப் பெற்றோனாவன். சிவகுருவின் திருவடி முடிசேரச் சிவஞானச் செல்வம் சேர்ந்த சூரியோனாவன். ஏனையார் - அபக்குவர். சாதகம் - துணை.

(அ. சி.) வாராத காதல் - அபக்குவர்க்கு வாராத அன்பு. குருபரன் பாலாக - குருவினிடத்து உண்டாக. சாதக நான்கும்- சரியையாதி நான்கும் அடிவைக்க - குருவானவர் திவடி தூக்கை செய்து உபதேசிக்க

(10)

1672. உணர்த்து மதிபக் குவர்க்கே யுணர்த்தி

இணக்கிற் பராபரத் தெல்லையுள் இட்டுக்

குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்கொண்டு

உணர்த்துமி னாவுடை யான்தன்னை யுன்னியே.[1]

(ப. இ.) முற்செய்தவத்தான் சிவஞானம் எய்துதற்குரிய சிறந்த செவ்விவாய்ந்த நன்மாணவாக்கே திருவைந்தெழுத்தை யுணர்த்தி, எப்பொருட்கும் சார்பாய் முழுமுதற்சிவம் நின்றும் எவற்றினும் தோய்தலும் பற்றுச்செய்தலுமில்லாத அதன் மேலான திருவடி எல்லையுள் ஆவியினைப் புகுவித்து, முறையே : கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் நாற்புலங்களையும் மேற்கொண்டு நானெறியினையும் அறிவுறுத்தியருள்வன். ஆவிக்குரியானாகிய சிவபெருமான் தன்னை நினைந்து மேலோதியவற்றை உணர்த்தியருள்வன்.

(அ. சி.) இணக்கில் - ஒன்றோடும் பற்றுதல் இல்லாத. பராபரத்து எல்லையில் - சிவ வியாபகத்துள். உத்தரம் - வடக்கு. பச்சிமம் - மேற்கு. ஆவுடையான் தன்னை - பசுபதியை.

(11)

1673. இறையடி தாழ்ந்தை வணக்கமும் எய்திக்

குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்

சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ

டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே.[2]

(ப. இ.) முழுமுதற் சிவபெருமான் திருவடிக்கண் பேரன்புபூண்டு தாழ்ந்து, நெஞ்சுநேர் இரு கையும் கூப்பல், தலைமேல் ஏறக் கூப்பல், தலை ஒன்று கையிரண்டு முழங்காலிரண்டு ஆக ஐந்துறுப்பு; இவற்றுடன் நெஞ்சமும் கூடி ஆறுறுப்பு; தலை ஒன்று, காதிரண்டு, கையிரண்டு, கால் இரண்டு நெஞ்சு ஒன்று ஓக எட்டுறுப்பு ஆகிய இம்முறையால் வணங்குவது ஐவகை வணக்கமாகும் நமக்கு வேண்டும் இன்றியமையாப் பொருள்களை வேண்டி விண்ணப்பித்தல், இறைவன்றன் எண்குணங்களையும் புகழ்ந்து போற்றல், கட்டும், யான் எனதென்னும் செருக்கும் அற வொழுகல் ஆகிய இப் பண்புகளைச் சிவகுரு அறிவுறுத்துவன். மேலும், சிவபெருமான் பண்பினையும் அறிவுறுத்துவன். இவற்றை அன்புடன் ஏற்றுக்கொள்வோன் நன்னெறி நன்மாணவனாவன். நன்னெறி - சன்மார்க்கம். இவ்வணக்கம் நம்பியாரூரர் திருவாரூரில் 'அன்பு பெருக வுருகியுள்ள மலைய அட்டாங்க பஞ்சாங்கமாக' வணங்கினாரென்பதனால் விளங்கும்.

(அ. சி.) ஐவணக்கம் - (1) கைகளால் கும்பிடுதல். (2) கைகளைத் தலைக்குமேல் தூக்கி கும்பிடுதல் (மூன்றுறுப்பு). (3) கைகள் இரண்டு, தலை ஒன்று, முழங்கால்கள் இரண்டு ஆக ஐந்து உறுப்புகள் நிலந்தோய வணங்கல்.

(4) மேற்கூறிய ஐந்து உறுப்புகளுடன் நெஞ்சம் நிலந்தோய வணங்கல். (5) கைகள் 2, கால்கள் 2, தலை 1, காதுகள் 2, நெஞ்சு 1 ஆக எட்டு உறுப்புக்களும் நிலந்தோய வணங்கல். இவைகளை வடமொழியாளர் ஏகாங்கம், திரியாங்கம், பஞ்சாங்கம், சாஷ்டாங்கம், அஷ்டாங்கம் என்பர். சிறையுடல் - பந்தமான சரீரம். நூயற - நூ என்பது அல்ல என்று. அறிவுக்கு - ஆன்மாவின் அறிவுக்கு

(12)

---

1. என்னை. அப்பர், 5. 91 - 8.

கல்லாலின் நூழற். " 6. 18 - 3.

1674. வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்

வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச்சித் தாந்தத்து

வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே

தாழ்க்குந் தலையினோன் சற்சூட னாமே.

(ப. இ.) மறைமுடிவாம் வேதாந்தமென்பது இயற்கை உடைமையாகிய நில முதலியனவும், செயற்கை உடைமையாகிய உடை, உறையுள், ஊர்தி, ஒப்பனை முதலிய உடைமைகளும், உயிர்நிலையாகிய உடம்பும் என்னும் மூவகைப் பற்றுக்களும் விட்டநிலையாகும். இம் மூன்றனையும் மண், பொன், பெண் எனக் கூறுவர். புலன்வழிச் செல்லும் புன்னெறி வாழ்க்கையினை மாற்றி, அப் புலன்களை நலன்வழிச் செலுத்தும் சித்தாந்தத்து, உலகியல் வேட்கைவிட்ட வேதாந்தி முறையாக வந்து சேர்வன் . சேர்ந்து சித்தாந்தச் சிவகுருவின் பாதம் தலையினால்வணங்குவன். அவனே நன்னெறிசேர் நன்மாணாக்கன் ஆவன்.

(அ. சி.) வேட்கை - மூவகை ஆசைகள். வாழ்க்கைப் புலன் - உலக வாழ்வுக்கு ஆதாரமான இந்திரியங்கள். சித்தாந்தத்து வேட்கை விடுமிக்க வேதாந்தி - சுத்த அத்துவித சித்தாந்தத்திலே ஆசைகொள்ளும் வேதாந்தி. தாழ்க்கும் - வணங்கும்.

(13)

1675. சற்குணம் வாய்மை தயாவிவே கந்தண்மை

சற்குரு பாதமே சாயைபோல் நீங்காமே

சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்

அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சூடனே,[1]

(ப. இ.) நன்னெறி நன்மாணாக்கனுக்குரிய பத்துத் தன்மைகளும் முறையே வருமாறு: நற்பண்பு, வாய்மை, இரக்கம், நல்லறிவு, பொறுமை, குருவினடி நீங்காமை, உண்மையறிவின்பப் பெரும் பொருளுணர்வு, தெளிவு, ஓர்வு, அருள் நிகழ்ச்சி என்பன. இவை முற்றவுமுடைய மெய்யுணர்வினனே நன்மாணவனாவன். சற்சூடன் - நன்மாணவன்.

(அ. சி.) தயா - தயை, கருணை, இரக்கம். சாயைபோல் - நிழல் போல். தண்மை - பொறுமை.

(14)

ஆறாம் தந்திரம் முற்றும்.

---

1. பத்துக்கொ. அப்பர், 4. 18 - 10.